**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**சுய கற்றல் கையேடு - 2020**
**கர்நாடக சங்கீதம்**

**தரம் 10 - 11**

# இராகலட்சணங்கள்

## ஹரிகாம்போதி

இது 28 வது மேளகர்த்தா இராகம். 5வது சக்கரத்தில் 4வது ராகம்.
பாண – பூ என்பது இந்த ராகமே ஆகும்.
ஆ ஸரிகமாதநிஸ்
அ ஸ்நிதபமகரிஸ
இந்த ராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் முறையே ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், கைசிகிநிஷாதம்.
க, ம, நி இராகச் சாயா ஸ்வரங்கள்.
ப, நி ஸ்வரங்களில் உருப்படிகள் ஆரம்பிக்கின்றன. ப, நியாய ஸ்வரம்.
திருத்தாண்டகம் இந்த ராகத்தில் தான் பாடப்பட்டு வருகின்றது.
பண் குறிஞ்சி என்பது இந்த ராகமாகும்.
ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் கமாஜ்தாட் என இந்த ராகம் அழைக்கப்படும்.
தமிழிசையில் செம்பாலைப் பண் என்று சொல்லப்படும்.

**சஞ்சாரம்**

பதநிஸ்-நிதபம-கமபத-தபமக-பமகரி-ஸரிகம-பதநிஸ்-நிதபா
தநிஸ்ரி-க்ம்க்ரீ-க்ரிஸ்நி-தநிஸ்ா-நிதபம-தபமக-கரிஸநி-தநிஸா

**உருப்படிகள்**

| | | | |
|---|---|---|---|
| கீதம் | வாசரவணனே | ஆதி | தஞ்சை க.பொன்னையாபிள்ளை |
| கீர்த்தனை | எங்கே தேடுகிறாய் | ஆதி | முத்துத்தாண்டவர |
| கிருதி | ராமநன்னு | ரூபகம் | தியாகராஜசுவாமிகள் |

## பந்துவராளி

இது 51வது மேளகர்த்தா இராகம்.
இதன் புராதன பெயர் காமவர்த்தனி
ஆ ஸரிகமபதநிஸ்
அ ஸ்நிதபமகரிஸ
இந்த ராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் முறையே ஸட்ஜம், சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், காகலிநிஷாதம்.



kalvi.lk

எல்லா ஸ்வரங்களும் இராகச் சாயா ஸ்வரங்கள்.
உருப்படிகள் ஸ, ப, நி ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்
தேவாரத்தில் வரும் பண் சாதாரி, நட்ட ராகம் என்பன இந்த ராகமே.
திரிஸ்தாயி ராகம். மத்திமம் நியாய ஸ்வரம்.
ஹிந்துஸ்தானி இசையில் பூர்வி தாட் என அழைப்பர்.
பூர்வ கிரந்தங்களில் “சாமக்ரிய” என்ற பெயர் உடைய ராகம்.

**சஞ்சாரம்**

பமகம பதநிஸ்-நிதபம-கரிஸரிகம-பமாதபமகம-பதநிஸ்ரிக்க்ரி ஸ்நிதர்ஸ்நிதபமகரி ஸரிகமரிஸா ஸரிகமபாமகரி-பமககரிரிஸாஸநிதநிஸரிஸா

**உருப்படிகள்**

| | | | |
|---|---|---|---|
| கிருதி | சிவசிவசிவயன | ஆதி | தியாகராஜசுவாமிகள் |
| வர்ணம் | ஸாமிநின்னே | ஆதி | ஷட்கால நரஸய்ய |
| கிருதி | நின்னுநேர | ஏகம் | தியாகராஜசுவாமிகள் |

## தோடி

இது 8வது மேளகர்த்தா இராகம்.
இதன் புராதன பெயர் ஹனுமதோடி.
ஆ ஸரிகமபதநிஸ்
அ ஸ்நிதபமகரிஸ
இந்த ராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் முறையே ஸட்ஜம், சாதாரண காந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், கைசிகிநிஷாதம்.
க, ம, ப, த, நி நியாய ஸ்வரங்கள்.
எப்போதும் பாட ஏற்ற ராகம் புராதன ராகம். திரிஸ்தாயி ராகம்.
தோடி சீதாராமையர் இந்த இராகத்தை 8 நாட்கள் பாடினார் என்று வரலாறு கூறுகின்றது.
பஞ்சமத்தில் நின்று சஞ்சாரம் செய்யலாம்.
பஞ்சமவர்ஜ பிரயோகங்கள் இந்த ராகத்தின் சிறப்பை விளக்குகின்றன. உருப்படிகள் ஸகமதநி ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன.
மூர்ச்சனாகாரக மேள ராகம். மத்த கோகிலம் என்னும் பெயருடன் வழங்கும் வர்ணமெட்டு இந்த ராகத்திலேயே அமைந்துள்ளது.

**சஞ்சாரம்**

தநிஸ்ா ஸாஸ்நிதா – தநிஸ்ரிரிஸ்ா ஸ்நிதபமதநிஸ்ரிக்ம்கா்ரிரிஸ்ா ஸநிதபா – காமபதநிதபமகரி -– காரிஸநிதநி – தாநிஸ

**உருப்படிகள்**

| | | | |
|---|---|---|---|
| வர்ணம் | ஏராநாபை | ஆதி | பட்டணம் சுப்ரமணியய்யர்பதம் |
| கிருதி | தாயே யசோதா | ஆதி | ஊத்துக்காடு வெங்கடசுப்பையர் |
| கிருதி | கடைக்கண் | ஆதி | பாபநாசம்சிவன் |



kalvi.lk

## கல்யாணி

இது 65வது மேளகர்த்தா இராகம்.
இதன் புராதன பெயர் மேசகல்யாணி.
ஆ ஸரிகமபதநிஸ்
அ ஸ்நிதபமகரிஸ
இந்த ராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் முறையே ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலிநிஷாதம்.
இதில் எல்லா ஸ்வரங்களும் இராகச்சாயா ஸ்வரங்கள் ஸரிகபதநி ஆகிய ஸ்வரங்களில் உருப்படிகள் பெரும்பாலும் ஆரம்பிக்கின்றன.
எல்லா வேளைகளிலும் பாடலாம் எனினும் மாலையில் பாட மிகவும் ரஞ்சனையாக இருக்கும்.
.இந்த இராகத்தின் மத்திமத்தை மாற்றினால் சங்கராபரண ராகம் வரும்.
கம்பீரமான ராகம். முதன் முதலில் பிரசித்திக்கு வந்த பிரதி மத்திம ராகம் இதுவாகும்.

**சஞ்சாரம்**

கமபதநிஸ்ா - ஸ்நிதபாமகரி – கமபதநிதாபம – பதநிஸ்ாஸ்நிதா தநிதக்ரிஸ்நிதா–
நிரிகதபாமககரிரி ஸாநிதநிஸா

**உருப்படிகள்**

| | | | |
|---|---|---|---|
| கீதம் | பதம்தருவாய் | ஆதி | தஞ்சை க. பொன்னையாபிள்ளை |
| வர்ணம் | வனஜாஷி | அட | பல்லவி கோபாலய்யர் |
| கிருதி | வாசுதேவயனி | ஆதி | தியாகராஜசுவாமிகள |

## ஆரபி

இது ஒரு ஜன்ய ராகம். தாய் ராகம்.
29வது மேளகர்த்தாவாகிய தீரசங்கராபரணம்
ஆ ஸரிகமபதஸ்
அ ஸ்நிதபமகரிஸ
இந்த ராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் முறையே ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலிநிஷாதம்.
இந்த ராகத்துக்கு ரி ஜீவ ஸ்வரமாகும்.
ரி, ப நியாய ஸ்வரங்களாகும். ரி, ம, த இராகச் சாயா ஸ்வரங்கள் ஆகும்.
ரி, த கம்பித ஸ்வரங்களாகும். எப்பொழுதும் பாடலாம்.
உருப்படிகள் ரி, ப, த ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன.
தேவாரத்தில் பண் பழம்தக்கராகம் என்பது இந்த இராகமேயாகும். மங்களகரமான இராகம்.
திரிஸ்தாயி இராகம்
கச்சேரியின் ஆரம்பத்தில் பாட ஏற்ற இராகம்.
கன பஞ்சகராகங்களில் ஒன்று.
சஞ்சாரம
தஸ்தப மகரீ - ஸரிமப தஸ்ா – ரீ ம்க்ரீ - ஸ்ரிஸ்நிதா ததரி்ரி
ததஸ்ாஸ் தஸ்தா – பதரிஸ்நித – பம கரி ஸரிஸநிதா – தத ரிரி ஸத ஸா

உருப்படிகள்

| | | | |
|---|---|---|---|
| வர்ணம் | அன்னமே | ஆதி | டைகர்வரதாச்சாரியார் |
| கீர்த்தனை | அன்புகொண்டென்னை | மிஸ்ரசாபு | தண்டபாணி தேசிகர் |
| பஞ்சரத்தினம் | ஸாதிஞ்சனே | ஆதி | தியாகராஜசுவாமிகள் |

## மத்தியமாவதி

இது ஒரு ஜன்ய ராகம்.
இதன் தாய் இராகம் 22வது மேளகர்த்தாவாகிய கரஹரப்பிரியா
ஆ ஸரிமபநிஸ்
அ ஸ்நிபமரிஸ
இந்த ராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் முறையே ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், சுத்தமத்திமம், பஞ்சமம், கைசிகிநிஷாதம்.
கச்சேரியின் இறுதியில் பாட ஏற்ற இராகம். தேவாரத்தில் வரும் பண் செந்துருத்தி என்பது இந்த ராகமே ஆம். புராணம் இந்த இராகத்தில் தான் பாடப்பட்டு வருகிறது. மங்களகரமான இராகம் நீண்ட ஆலாபனைக்கு இடம் கொடுக்காத இராகம். ரி, ம, நி ஜீவஸ்வரங்கள்.
ரிமபநி நியாய ஸ்வரங்கள்.ஸ, ரி, ம, ப, நி இந்த ஸ்வரங்களில் பெரும்பாலும் உருப்படிகள் ஆரம்பிக்கின்றன. எப்போதும் பாட ஏற்ற இராகம்.
இந்த ராகத்தை கச்சேரி பஜனை நாடகம் காலஷேபம் முதலிய நிகழ்ச்சிகளில் கடைசியில் பாடி முடிக்கும் சம்பிரதாயம் தொன்று தொட்டு வருகிறது.

**சஞ்சாரம்**

ஸரிம பநி – பமரிமபநி - ஸ்ரிம்ரி ரிஸ் - ரிஸ்ரிம்ரீ ஸ்ரீப்ம்ரீஸ்ரிஸ
ஸ்நிப ரிஸ்நி பம ரிமபம – ரிமரிஸ நிபநிஸா ஸரிமபநி பமரீஸா ஸநிபாநீஸா

**உருப்படிகள்**

| | | | |
|---|---|---|---|
| கீதம் | சிவபெருமானே | ஆதி | டைகர்வரதாச்சாரியார் |
| கீர்த்தனை | கற்பகமே | ஆதி | பாபநாசம் சிவன் |
| கிருதி | பாலிம்சு | ஆதி | சியாமாசாஸ்திரிகள் |

## கரஹரப்பிரியா

இது 22வது மேளகர்த்தா இராகம். வேதசக்கரத்தில் 4வது இராகம்.
ஆ ஸரிகமபதநிஸ்
அ ஸ்நிதபமகரிஸ
இந்த ராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் முறையே ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், கைசிகிநிஷாதம்.
ரி, க, த, நி இராகச் சாயா ஸ்வரங்களும் ஜீவ ஸ்வரங்களும் நியாய ஸ்வரங்களுமாகும். எப்போதும் பாட ஏற்ற ராகம்.
ஸ, ரி, ப, நி ஸ்வரங்களில் உருப்படிகள் ஆரம்பிக்கின்றன.
சாமகானம் இந்த ராகத்தில் தான் பாடப்பட்டதாகக் கூறப்படுகிறது.
ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் இந்த ராகம் காபிதாட் எனச் சொல்லப்படும்.



kalvi.lk

**சஞ்சாரம்**

நிதபம கரிகம-பதநிஸ் ரிக்ம்க்-கிரிஸ்நி-தநிஸ்நி-தபமக கரிஸா
ரிகமப தநிஸ்ஸ்-தநிஸ்ரிக்ம் கிரிஸ்நி-ரிஸ்ஸ்நிதபதநி-ஸ்நிதபமகரிஸ

**உருப்படிகள்**

| | | | |
|---|---|---|---|
| கீர்த்தனை | மாயவித்தை | ஆதி | முத்துத்தாண்டவர் |
| கிருதி | பக்கல | மிஸ்ரசாபு | தியாகராஜசுவாமிகள் |
| கீர்த்தனை | செந்தில் ஆண்டவன் | ரூபகம் | பாபநாசம்சிவன் |

# வாக்கேயகாரர்கள்

## முத்துதாண்டவர்

- இளமைக் காலம் இவர் 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சீர்காழியில் இசைக்கலையே தம் குலத் தொழிலாகக் கொண்ட இசைவாணர் மரபிலே தோன்றினார்.
- பெற்றோரால் இவருக்கு இடப்பட்ட பெயர் "தாண்டவன்" ஆகும். சருமநோய் காரணமாக குலத்தொழிலை புரிய முடியாது ஆலயத்திலேயே காலம் கழித்து வந்தார்
- ஒரு நாள் பசியால் ஆலயத்தினுள் படுத்துறங்கையிலே. தேவி அனுக்கிரகம் கொண்டு சிறுமி வடிவத்தில் தோன்றி அவருடையபசியைத்தீர்க்கஉணவளித்தார்.அவரைத்தில்லையம்பலத்திற்குச்சென்றுநடராசப்பெருமானைஇன்னிசையால்வழிபடும்படிபணித்தார் முத்துத் தாண்டவர் சிதம்பரம் சென்று நடராசப் பெருமானைத் தொழுகையில் அடியார் கூட்டத்திலிருந்து பூலோக கயிலாச கிரி சிதம்பரம் என்னும் தொடர் மொழி வெளிப்படவேஅத்தொடரையே முதலாகக் கொண்டு "பூலோக கயிலாச கிரி சிதம்ார மல்லால் புவனத்தில் வேறும் உண்டோ" (பவப்பிரியா - மிஸ்ரஜம்பை) என்ற கீர்த்தனையை இறைவன் திருவருளால் பாடி முடித்தார். அனறே அவரது உடற்பிணியும் நீங்கியது.
- "பேசாதே நெஞ்சமே" (சூரியகாந்தம் - மிஸ்ரஜம்பை) என்ற பாடலை பாடி முடித்துப் பரிசும் பெற்றார்.
- கொள்ளிடம் பெருக்கெடுத்து ஓடியது. அப்போது கரையிலேயே நின்று கொண்டு "காணாமல் வீணிலே காலம் கழிந்தோமே" (தன்யாசி - மிஸ்ரசாபு) என்ற பாடலை பாடி முடித்தவுடன் வெள்ளப்பெருக்கு அவருக்கு வழிகொடுத்தது.
- ஆற்றைக் கடந்து கரையேறிக் "தரிசனம் செய்வேனே" (வஸந்தா - ஆதி)என்ற கீர்த்தனையைப் பாடினார். சிதம்பரம் அடைந்து இறைவன் திருமன் "கண்ட பின் கண் குளிர்ந்தேன்" (மலைய மாருதம் - ரூபகம்) என்னும் கீர்த்தனையைப் பாடினார்.
- சில நாள் சென்ற பின் ஒரு நாள் சீர்காழியிலிருந்து சிதம்பரத்துக்கு வரும் வழியில் அவரைப் பாம்பொன்று தீண்டியதும் உள்ளம் கலங்காமல் "அருமருந்தொரு தனிமருந்து அம்பலத்தில் கண்டேன்" (காம்போதி - ரூபகம்) என்னும் கீர்த்தனையைப் பாட விடம் நீங்கியது.
- இறுதியில் ஆவணித் திங்கள் பூச நன்னாளில் இறைவன் திருமுன் நின்று "மாணிக்கவாசகர் பேறெனக்குத் தரவல்லாயோ அறியேன்" (கோகிலப்பிரியா ரூபகம்) என்னும் பாடலைப் பாடச் சிதம்பரத்திலிருந்து பேரொளியொன்று வெளிப்பட்டது. அப்பேரொளிப் பிழம்பில் முத்துத்தாண்டவர் இரண்டறக் கலந்தார்.



kalvi.lk

- இவர் அறுபது கீர்த்தனங்களும், இருபத்தைந்து பதங்களும் இயற்றியுள்ளார்.
- "தெருவில் வாரானோ" என்ற கமாஸ் இராக ரூபக தாளத்தில் அமைந்த பதம் சிறந்ததொன்று.
- இவர் பாடல்கள் சொற்சுவை, பொருட்சுவை, இசை நுணுக்கம், எதுகை மோனை,முதலிய தொடை நயங்களைக் கொண்டனவாகவும், பழையவரலாறுகள், சைவசித்தாநதக் கருத்துக்கள் நிரம்பியுள்ளனவாகவும் விளங்குகின்றன.
- இவரது பதங்கள். "பேரின்ப பதங்கள்"எனசசிறப்பிக்கப்படுகின்றன.

## கோபாலகிருஷ்ணபாரதி

- 1810 ஆம் ஆண்டு நாகபட்டினத்தைச் சேரந்த நரிமணம் என்ற இடத்தில் இராமசாமி பாரதியாருக்கு மகனாக அவதரித்தார். "கோவிந்த சிவம்" என்பவர்தான் இருடைய முதல்குரு
- இந்துஸ்தான் இசைவித்துவான் "இராமதாஸ்" என்பவரிடம் இந்துஸ்தானி இசை முறையைாகக் கற்றார்.
- கனம் கிருஸ்ண ஐயரிடம் கர்நாடக இசைமுறையைக் கற்றார். இவர். "கோபாலகிருஷண்" எனற் முத்திரையுடன் அநேக கீர்த்தனைகளை தமிழில் இயற்றியுள்ளார்.
- சேக்கிழார் எழுதிய பெரியபுராணத்தில் இருக்கும் 37 செய்யுட்களில் அடங்கிய நந்தனார் சரித்திரத்தைக் கோபாலகிருஷண் பாரதியார் "நந்தனார் சரித்திரம்" என்னும் இசை நாடகமாக எழுதினார்.
- இந்த இசைநடகத்தில் அழகிய கீர்த்தனைகளுடன் நொண்டிச்சிந்து, ஆனந்தக்களிப்பு, இருசொல் அலங்காரம், லாவணி, தண்டகம் முதலிய இசை முறைகளும் கையாளப்பட்டுள்ளன.
- இந்நாடகம் தியாராஜசுவாமிகளின் "பிரஹலாத பக்தி விஜயம்" "நௌகா சரித்திரம்" ஆகிய இசை நாடகங்களோடு சரிசமமாகக் கருதப்படும் தகுதி வாய்ந்தது.
- தியாகராஜரின் தூண்டுதலால் "சபாபதிக்கு" என்னும் ஆபோகி ராக கிருதியொன்றை இயற்றினார்
- மற்றும் தியாகராஜரின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளைப் பின்பற்றி தாமும் தமிழில், 1. ஹரஹர சிவசங்கர - நாட்டை 2. சரணாகதமென்று - கௌளை 3. பிறவாத வரம் தாரும் - ஆரபி 4. ஆடிய பாதமே கதி - வராளி 5. மறவாமல் எப்படியும் - ஸ்ரீராகம் என்ற பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை இயற்றினார்.
- கோபாலகிருஷ்ண பாரதியார் இயற்றியுள்ள ஏனைய இசைநாடகங்கள் 1. இயற்பகை நாயனார் சரித்திரம் 2. திருநீலகண்ட நாயனார் சரித்திரம் 3. காரைக்கால அம்மையார் சரித்திரம் என்பவையாகும்
- மேலும் இவர் "ஞானச் சிந்து "ஞானக் கும்மி" முதலியவைகளையும் இயறறியுள்ளார்.
- சிறுவர்கள் மனம் பண்படும் பொருட்டு கும்மி, கோலாட்டம், ஊஞ்சல், நலங்கு, லாலி முதலிய பாடல்களையும் பாடியுள்ளார். எடுத்துக்காட்டுகள் 1. திருவடி சரணம் - காம்போஜி 2. திலல்லைதத்லம் - சாமா 3. நடனமாடினார் - வசந்தா 4. கனசபேசன் சேவடி - கமாஸ் 5. கண்ணாலே கண்டேன் - நாதநாமக்கரியை மேலும்
- இவர் பெண்களுக்காகச் "சாந்துப்பொட்டு தளதளங்க" என்று தொடங்கும் "சிதம்பரக்கும்மி" என்ற பாடலை இயற்றினார். இது சிதம்பர ஆலயத்திலுள்ள விநாயகர் முதலியோருடைய சந்ததிகளை முறையே தரிசித்து வரும்போது அம்மூர்த்திகளைப் பாடுவதாக அமைந்துள்ளது.



kalvi.lk

- இவரது பாடல்களிலே பல வேதாந்தக் கருத்துக்கள் காணபப்டுகின்றன.
- பாரதியாரின் சீடர்களில் முக்கியமானவர்கள். 1. சிதம்பரம் பொன்னுச்சாமி தீட்சிதர்
- 2. சிதம்பரம் ஸ்ரீ ராஜரத்தின தீட்சிதர் 3. மாயூரம் இராமசாமி ஐயர் 4. மாயூரம் நடேச ஐயர் 5. மாயூரம் சுப்பிரமணிய ஐயர்
- கோபாலகிருஷ்ண பாரதியார் தனது 86 ஆவது வயதில் 1896 ஆம் ஆண்டு மகாசிவராத்திரியன்று பூதவுடலை நீத்து புகழுடம்பெய்தினார்.

# தியாகராஜ சுவாமிகள் (1767 -1848)

- சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராவர். கி.பி. 18ஆம் நூற்றாண்டில் திருவாரூரில் ராம பக்தரான ராமபிரம்மம் என்பவருக்கும் சீதாம்மாவுக்கும் மகனாக பிறந்தார்
- திருவையாறில் இவர் சமஸ்கிருத மொழியில் பயிற்சி பெற்றார்.. தியாகராஜர் ஓய்வு நேரங்களில் வெங்கடராமையரிடம் சங்கீதம் பயின்று வந்தார். . 18 வது வயதில் தியாகராஜருக்குத் திருமணம் நடந்தேறியது.
- பல அபூர்வ இராகங்களில் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்.
- ஒரே இராகத்தில் பல கீர்த்தனைகளை இயற்றியிருப்பதிலிருந்து இவருடைய அபூர்வ சங்கீதத் திறமையும்கற்பனையும்வெளியாகின்றன..
- மன்னரான சரபோஜிஅரசவைக்குஅழைத்துபோதுதியாகராஜர்அரசவைக்கு செல்ல மறுத்து நிதிசால சுகமா என்ற கல்யாணி இராகக் கிருதியைப் பாடினார்…
- ஏலநீதயராது கிருதியே தியாகராஜர் முதன் முதலில் பாடிய உருப்படியாகும். ஆரம்ப காலத்திலேயே தியாகராஜர் செய்த உருப்படிகள் அனேகமாக திவ்யநாமக்கீர்த்தனைகளாகவும் தனிச் சரணத்தை உடைய கிருதிகளாகவுமே அமைந்தன.
- இவர் இயற்றிய கீர்த்தனைகள் யாவும் தெலுங்கு மற்றும் வடமொழியில் அமைந்துள்ளது
- காஞ்சீபுரத்தில் இருந்து இராமகிருஷ்ண யதீந்திரர் என்னும் மகான் வந்து இராம நாமத்தை 96 கோடி முறை செபிக்கும் பதியாகராஜரிடம் கூறிச் சென்றார். இவர் அதனைத் 21 ஆண்டுகளிற் செய்து முடித்தார். இதனால் பல தடவைகள் இராம தரிசனத்தைப் பெறும் பாக்கியம் இவருக்குக் கிடைத்தது. இம் முக்கிய சந்தர்ப்பங்களில் ஏலநீதயராது (அடாணா இராகம்) தாரிணிகனுகொண்டினி (பிலகரி இராகம்) ஆகிய கீர்த்தனளை இயற்றினார். .இவர் சுமார் 2400 உருப்படிகள் செய்திருக்கிறார்.

  கீர்த்தனைகளைத் தவிர பிரகலாத பக்தி விஜயம், நெவ்கா சரித்திரம் முதலிய இசை நாடகங்களை இயற்றியுள்ளார்.
- கனராக பஞ்சரத்தினம், நாரத பஞ்சரத்தினம், திருவொற்றியூர் பஞ்சரத்தினம், கோவூர் பஞ்சரத்தினம், சிறீரங்க பஞ்சரத்தினம், லால்குடி பஞ்சரத்தினம் ஆகிய கிருதிகளை இயற்றியுள்ளார்
- . எல்லாக் கர்த்தா இராகங்களிலும் இவர் கிருதிகளை இயற்றியிருக்கின்றார். அவை அனைத்தும் பக்தி ரசம் ததும்புவன ஆகும். முதன் முதலில் சங்கதிகளை உருப்படிகளில் ஒழுங்கான முறையில் பிரயோகித்தவர் இவரே.
- இவரது உருப்படிகள் கதலி ரஸத்திற்கு ஒப்பிடப்படுகின்றது
- இவரது முத்திரை – தியாகராஜனுத



kalvi.lk

- சீடர்கள் 1. தஞ்சாவூர் ராமராவ் 2.வீணை குப்பய்யர். 3. வாலாஜாபேட்டை - வேங்கடரமண பாகவதர் 1847 ஆம் ஆண்டில் தமது 80 ஆவது வயதில் தியாகராஜ சுவாமிகள் காலமானார்.
- இவரின் பூதவுடல (சொண்டி வெங்கட ரமணய்யர்) சமாதிக்கருகில் தகனம் செய்யப்பட்டது.

# முத்துசுவாமி தீட்சிதர்

- இவர் இராமசுவாமி தீட்சிதருக்கும் சுப்புலட்சுமி அம்மையாருக்கும் மகனாக 1776 ஆம் ஆண்டு பிறந்தார்.
- தெலுங்கு, சமஸ்கிருதம், சங்கீதம் மூன்றையும் தன் தந்தையாரிடமே கற்றார்.
- காவியம், நாடகம், அலங்காரம், வியாகரணம் முதலிய இலக்கணங்களையும் முறையாக கற்றார்.
- தீட்சிதர் சிதம்பரநாத யோகியிடம் ஸ்ரீவித்யா மகாமந்த்ர தீட்சை பெற்ற பின்னர் அவருடனே காசிக்குச் சென்று விசுவநாத தரிசனம் செய்தார்.
- தீட்சிதர் கர்நாடக சங்கீதத்தில் மட்டுமன்றி இந்துஸ்தானி சங்கீதத்திலும் தேர்ச்சி பெற்றார்.
- பின் குருவின் சொற்படி திருத்தணி சென்றார். சுப்பிரமணியக் கடவுளைத் தரிசிக்க மலை ஏறும் போது ஒரு கிழவர் எதிரில் வந்து " முத்துஸ்வாமி வாயைத் திற" என்று சொல்லி ஒரு கற்கண்டைப் போட்டு ஆசீர்வதித்து மறைந்து விட்டார். அப்போதே மயில் மேல் ஏறிச் செல்லும் முருகனைத் தரிசித்து பரவசமுற்ற தீட்சிதர், சுப்பிரமணிய சுவாமியின் அருளால் கானவாக்கு உதித்து உருப்படிகளை இயற்றும் திறனையும் பெற்றார்.
- இவருடைய முதல் கிருதி மாயாமாளவகௌளையில் "சிறீ நாதாதி குருகுஹோ ஜயதி" என்பதாகும்.
- தன்னுடைய பாடல்களில் குருகுஹ என்ற முத்திரையைக் கையாண்டார்.
- இவரது கிருதிகள் நாளிகேர ரஸத்திற்கு ஒப்பானவை.
- இவரது முத்திரை குருகுஹ

- கல்யாணியில் "ஜம்பூபதே" (பஞ்சலிங்க கிருதி) என்ற கிருதியையும்இ சிறீரங்கம் ரங்கநாத ஸ்வாமியின் பேரிலும் கிருதிகள் இயற்றியுள்ளார். இவர் பல தொகுதிக் கீர்த்தனைகளையும் இயற்றினார்.

| | | | | |
|---|---|---|---|---|
| ○ பஞ்சலிங்கஸ்தலக | கிருதி | - | 5 | கிருதிகள் |
| கமலாம்பாநவா | வர்ணம் | - | 9 | கிருதிகள் |
| அபயாம்பாநவா | வர்ணம் | - | 9 | கிருதிகள் |
| சிவநவா | வர்ணம் | - | 9 | கிருதிகள் |

- நவக்கிரகக் கிருதி - 9 கிருதிகள்
- தீட்சிதரின் பெரும்பாலான கிருதிகள் சமஸ்கிருத மொழியில் இருப்பினும் சிலகிருதிகள்மணிப்பிரவாளத்திலும் உள்ளன.



kalvi.lk

### சீடர்கள்

சின்னையா பொன்னையா சிவானந்தம் வடிவேலு

- தீட்சிதர் 1835ம் ஆண்டு "மீனலோசனி பாப மோசனி" என்ற கிருதியைப் பாடப் பாடக் கேட்டுக் கொண்டு சிவே பாஹி.. சிவே பாஹி ஓம் சிவே என்றார். உடனே அவரது ஆவி ஒளி வடிவாகப் பிரிந்தது. இவரது சமாதி எட்டயபுரத்தில் அமைந்துள்ளது.

## சியாமா சாஸ்திரிகள்

- இவர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவாரூரில் பிறந்தார். இவரது இயற்பெயர் வெங்கடசுப்ரமணிய சர்மா என்பதாகும். "சியாம கிருஷ்ணா" செல்லப்பெயரே இசை உலகில் நிலைத்து விட்டது.
- சமஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் பெரும் புலமை பெற்றார். பாடல்கள் இயற்றும் ஆற்றல் பெற்றார்.
- இவர் ஆரம்பத்தில் தமது மாமனாரிடம் இசை பயின்றார். பின்னர் சங்கீத சுவாமிகள் என்பவரைக் குருவாகக் கொண்டு சங்கீத நுட்பங்களையும் தாள சாஸ்திர மர்மங்களையும் சங்கீத நடை பேதங்களின் கிரமங்களையும் நன்கு அறிந்து கொண்டார்
- ஆதியப்பர் சங்கீதத்தின் நுட்பங்களையும்இ இரகங்களின் மர்மங்களையும்இ கமகங்களின் நுண்மைகளையும்சாஸ்திரிகளுக்கு விளக்கினார்.
- இளமையிலேயே உருப்படிகளை இயற்ற ஆரம்பித்தார். முதலில் சமஸ்கிருதத்திலும் பின்னர் தெலுங்கிலும் கிருதிகளை இயற்றினார். சிலஉருப்படிகளை தமிழில் செய்தார்.
- இவரது பாடல்களைக் கதலி ரசத்திற்கு ஒப்பிடுவர்.
- ஏறத்தாழ 300 கிருதிகளை இவர் இயற்றியுள்ளார்.
- அபூர்வமான இராகங்களை மாஞ்சி கர்நாடக காபி சிந்தாமணி போன்றவற்றிலும் கிருதிகளைச் செய்துள்ளார்.
- சில கிருதிகள் விலோம சாபு தாளத்தில் அமைந்துள்ளன..
- ஸ்வராஷ்ட்ர அணிகளை இவர் தனது உருப்படிகளில் நன்கு பயன்படுத்தியுள்ளார்.
- மதுரை மீனாட்சியம்மன் பேரில் நவரத்ன மாலிகை என்னும் பிரசித்தி பெற்ற ஒன்பது கிருதிகளைப் பாடினார்.
- இவரது உருப்படிகளில் பலவிதமான இசையணிகள் அழகுறச் சேர்க்கப்பட்டுள்ள
- சில உருப்படிகளில் அழகான ஸ்வரஸாகித்யங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சில: மரிவேரே கதி (ஆனந்தபைரவி) பாலிஞ்சு காமாட்சி (மத்தியமாவதி)
- இவரது முத்திரை சியாமகிருஹ்ண என்பதாகும்
- 1827 ம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்



kalvi.lk

# இசைகக்ருவிகள்

## நாதஸ்வரம்



### சிறப்பு

- கோயில் திருவிழாக்களிலும், கல்யாண வைபவங்களிலும், ஊர்வலங்களிலும், மற்றும் மஙக்ளகரமான வைபவங்களிலும் தனிச் சிறப்புடன் விளங்கும் ஒரு வாத்தியமாக நாதஸ்வரம் திகழ்கிறது.
- நாதஸ்வரத்தை நாயனம் என்றும் கூறுவர்.
- நாதஸ்வரம் ஒரு காற்று வாத்தியம். மங்கல இசையை உண்டாக்கும் வாத்தியம்.
- நாதஸ்வரத்தினின்றும் வெளிப்டுப்படும் நாதம் கன முள்ளதாகவும் வெகுதூரம் கேட்கக் கூடியதாகவும் இருக்கும்.
- ஆச்சாமரம் என்னும் மரத்தால்செ சய்யப்படுகிறது.
- கும்பகோணம் கும்பேசவரர் கோயிலிலும், ஆழ்வார் திருநகரிக் கோயிலிலும் கல் நாதஸ்வரங்கள் காணப்படுகின்றன.

### அமைப்பு

- பாகஙக்ள் 1. வட்ட வடிவமாக விரிந்து காணப்படும் அணைசு 2. உள்ளே கூடான நீண்ட மரக்குழலால் ஆகிய கூம்பு வடிவ உடல் 3. உடலின் மேல் பொருத்தப்படும் கெண்டை 4. சீவாளி
- அணைசு என்ற பகுதி Rosewood"என்றமரத்திலிருந்தும் சீவாளி என்ற பகுதி கொறுக்கந்தட்டையிலிருந்தும் செய்யப்படுகின்றன.
- நாதஸ்வரமானது 2 முதல் 2½ அடி நீளமும், மேலிருந்து கீழ் விரிந்து செல்லக் கூடியதுமான கூம்பு வடிவத்தில் உள்ள ஒரு மரக் குழாயாலானது
- அதன்அடிப்பாகத்தில்வரிசையாகஏழுஸ்வரத்துளைகளும், பக்கங்களில் சப்தத்தை வகைப்படுத்தும் துவாரங்கள் ஐந்தும் காணப்படுகின்றன.
- மேல்பாகத்தில் உலோகத்திலான ஒரு கூம்பு (கெண்டை) பொருத்தப்பட்டுள்ளது.தேவைக்கேற்பஉபயோகித்துக்கொள்ள நறுக்குகளும் (சீவாளி) ஒரு குச்சியும் உள்ளன.

### வாசிக்கும் முறை

- நாதஸ்வரத்தைத இரணடு கைகளாலும் நேராகப் பிடித்து சீவாளியை வாய்க்குள் வைத்து ஊதும் போது காற்று வாத்தியத்துள் செலுத்தப்படுகிறது. அதே சமயத்தில் இரண்டு கை விரல்களாலும் ஸ்வரத்துளைகளைத் தேவைக்கேற்ப மூடியும் திறந்தும் ஸ்வரங்களை எழுப்பி இசை உண்டாக்கப்படுகிறது.
- நாதஸ்வரத்திற்குரிய சுருதி வாத்தியம் ஒத்து என்னும் கருவியாகும்.
- நாதஸ்வரத்திறகுப் பக்கவாத்தியமாக வாசிக்கப்படுவது தவில் எனும் தோற் கருவியாகும்.
- நாதஸ்வரக் கலைஞர், ஒத்து இசைப்பவர், தவில் வித்துவான், தாளக் கலைஞர் (ஜால்ராக் கலைஞர்) ஆகிய நால்வரும் ஒன்று சேர்ந்தஇசைக்குழுவைப் பெரிய மேளம் என்று அழைப்பதுண்டு.



kalvi.lk

- நாதஸ்வரத்தில் இரண்டு வகை காணப்படுகின்றது. 1. பாரி 2. திமிரி 'பாரி' நாதஸவ்ரம் நீளம் அதிகமானதாயும், ஆதாரசுருதி குறைவானதாயும் இருக்கும். 'திமிரி' நாதஸ்வலம் நீளம் குறைவானதாயும், ஆதாரசுருதி கூடியதாயும் இருககும்.
- நாதஸ்வர இசையில் பிரபல்யம் பெற்றவித்துவான்களாக திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை, காரைக்குறிச்சி அருணாசலம்பிள்ளை, திருபாம்புரம் நடராஜசுநத்ரம்பிள்ளை, திருவிழிமிழலை சுப்பிரமணியபிள்ளை போனறோரைக்கு குறிப்பிட முடியும

# தவில்



**சிறப்பு**

- தவில் என்பது நாதஸ்வரத்திற்குத் துணையாக வாசிக்கப்படும் தாள இசைக்கருவியாகும். தொன்மை வாய்ந்த தோற்கருவி அவனத்தவாத்தியம்
- மங்கள வாத்தியம் என்றும் இராஜவாத்தியம் என்றும் அழைக்கப்படுகிறது
- அதத வதத வாத்தியம் எனப்படுகிறது

**அமைப்பு**

- தவிலின் உருளை வடிவிலான பகுதி பலா மரத்தினால் செய்யப்படுகிறது
- இதன் சிறிய பக்கத்தில் இருக்கும் தோல் வளந்தலை என்று கூறப்படும். இது எருமைக்கன்றின் தோலால் செய்யப்படுகிறது
- இதன் பெரிய பக்கத்தில் உள்ள தோல் தொப்பி என்று வழங்கப்படுகிறது. இது ஆட்டின் தோலினால் செய்யப்படுகிறது.
- இந்த தோலை தாங்கிப் பிடிக்கும் வளையங்கள் இரு பக்கமும் உண்டு. அவை மூங்கிலால் செய்யப்பட்டது. . .தவிலின் உருளை வடிவின் வெளிப்புறத்தில் உருக்கு உலோகத்தால் செய்யப்பட்ட வளையங்கள் இரண்டு பொருத்தப்படுகிறது. அவற்றில் 22 துளைகள் உள்ளன ஒவ்வொன்றிலும் 11 துளைகள் இருக்கும்.
- தவில் கழி திருவாச்சி மரக்கொம்பினால் செய்யப்படும் இது 12 அங்குல நீளமுடையது

**வாசிக்கும்முறை**

- இது ஒரு பக்கம் கழியினாலும் மறுபக்கம் கையாலும் வாசிக்கப்படும் இடந்தலையில் கழி எனப்படுகின்ற சிறு கோலாலும் வலந்தலையில் கூடுகள் அணிந்த விரல்களாலும் வாசிக்கப்படுகிறது

### சுருதி சேர்க்கும் முறை

தவில் சுருதி சேர்க்க முடியாத வாத்தியமெனினும் நாதஸ்வரத்தின் சுருதிக்கு தக்கவாறு சுருதி சேர்க்கப்படுகிறது

## புகழ் பெற்ற தவில் கலைஞர்கள்

- நீடாமங்கலம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, வலங்கைமான் சண்முகசுந்தரம். யாழ்ப்பாணம் தட்சிணாமூர்த்தி பிள்ளை. இனுவில் சின்னராசா.

# வயலின்



### சிறப்பு

வயலின் வில் போட்டு வாசிக்கப்படும் மரத்தினாலான தந்திக் கருவியாகும்.
இது பழங்காலத்தில் பிடில் (fiddle) என்றும் வழங்கப்பட்டது. இது மேலைத்தேயம்இ கீழைத்தேயம் என இரு பிராந்திய இசை வகைகளிலும் வாசிக்கப்படக்கூடிய ஒரே ஒரு வாத்தியக்கருவி ஆகும்.
இது பிரதான வாத்தியமாகவும் பக்கவாத்தியமாகவும் வாசிக்கப்படுகின்றது.
கூர்வையான நாத்தினை உடையது சுலபமாக எடுத்து செல்லக் கூடியது
ஆடவரின் பெண்களின் குரலுக்கேற்ப சுருதி சேர்த்து வாசிக்கலாம்

### அமைப்பு

இக்காலத்தில் நாம் பயன்படுத்தும் வயலின் ஐரோப்பியர்களால் 16ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது.
ஸ்ட்ராடிவேரியஸ் (Stradivarius) என்னும் இத்தாலியர் இதனை உருவாக்கினார்.
இசைக்கலைஞரில் இருந்து தென்னிந்திய இசை முறைமையான கருநாடக இசையில் வயலின் பாலசுவாமி தீட்சிதர் (1786 - 1858) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
கி.பி. 19 ஆம் நூற்றாண்டிலிருந்து கருநாடக இசையில் வயலின் ஒரு இன்றியமையாத பக்கவாத்தியமாக உள்ளது.
வயலினின் முக்கியப்பகுதி மேபில் (maple) எனப்படும் மரத்தால்



kalvi.lk

செய்யப்படுகிறது. கழுத்து போல் ஒர் அமைப்பு அதன் முன்பகுதி கருங்காலி மரத்தால் ) செய்யப்படுகிறது..

வயலினின் இன்னொரு முக்கியமான பகுதி "போ"(bow) எனப்படும் வில். இதை கொண்டு தந்திகளை தேய்த்த வாரே விரல்களால் அழுத்தத்தை கூட்டி குறைத்து இசை உருவாக்கப்படுகிறது.. இது குதிரையின் வாலில் உள்ள முடியினால் செய்யப்படுகிறது

## வாசிக்கும் முறை

வலது கையிலுள்ள வில் மூலமாக நாத்த்தினை எழுப்புவர் அதே நேரம்இடது கை விரல்களால் ஸ்வரப்பலகையின் மேலுள்ள தந்திகளில் விரலை வைத்து அழுத்தி தேவையான ஸ்லரங்கள் வாசிக்கப்படுகின்றன.

**சுருதி சேர்க்கும் முறை**

வயலினில் மூன்றரை முதல் நாலு ஸ்தாயி வரை வாசிக்கலாம்
முதலாவது கந்தி மத்தியஸ்தாயி பஞ்சமம் ( ப )
இரண்டாவது தந்தி மத்தியஸ்தாயி ஸட்ஜம் ( ஸ )
மூன்றாவது தந்தி மந்திரஸ்தாயி பஞ்சமம் ( ப )

நான்காவது தந்தி மந்திரஸ்தாயி ஸட்ஜம் ( ஸ )

**பிரபல்யமடைந்தோர்**

டி.என்.கிருஸ்ணன், மைசூர் சௌடையா, புத்துவாட்டி சோமு

## மிருதங்கம்



**சிறப்பு**

- மிருதங்கம் அல்லது தண்ணுமை என்பது அயன் வாத்தியமாகும்
- பிரதான பக்கவாத்தியமும் ஆகும்
- வீணாவேணுமிருதங்கம் எனும் வாத்தியத்திரயத்தில் மூன்றாவது இ.டம
- தமிழிசையில் மத்தளம் நான்முகன் என அழைப்பர்



kalvi.lk

**அமைப்பு**

- பலாமரக் குற்றியை அடிப்பாகம் சற்று கனமாகவும் ஓரப்பாகம் சற்று இலேசாகவும் கரடந்து பின் மூட்டுப் போடுவர்
- திறந்த இரண்டு முனைகளும் தோலினால் மூடப்பட்டிருக்கின்றன.
- இத் தோற்பகுதிகள் இரண்டும் தோலினாற் செய்த வார்களினால் ஒன்றுடனொன்று இழுத்துப் பிணைக்கப்பட்டுள்ளன.
- வலது பக்கத்தோலில் "சோறு" என்று அழைக்கப்படும் ஒரு கரு நிறப் பதார்த்தம் ஒட்டப்பட்டிருக்கும்..
- இடப்பக்கம் இடந்தலை வலப்பக்கம் வலந்தலை என அழைக்கப்படும்
- மிருதங்கம் 2 அடி நீளமும் இடது பக்கம் 8 அங்குலவிட்டமும் வலது பக்கம் 7 அங்குல விட்டமும் கொண்டதாக அமைந்திருக்கும்

**வாசிக்கும்முறை**

- மிருதங்கம் இருந்தநிலையிலேயேவாசிக்கப்படுவது வழக்கம். இது இரு கைகளினாலும் மணிக்கட்டுக்களினாலும் விரல்களினாலும் வாசிக்கப்படுகிறது

**சுருதி சேர்க்கும் முறை**

"வலந்தலையைப் பாடுபவரது ஆதார ஸட்ஜத்திற்கும் இடந்தலையை மந்திரஸ்தாயி பஞ்சமம் அல்லது மந்தரஸ்தாயி ஸட்ஜத்திற்கும் சுருதி சேர்ப்பர்

**மிருதங்கம் வாசித்துப் பிரபல்யமடைந்தோர்**

- துக்காராம் நாராணயணசாமிஐயர்
- பாலக்காடு மணிஐயர்

Education கல்வி අධ්‍යාපන

# வீணை



**சிறப்பு**

- இந்தியாவின் தேசிய வாத்தியமாக விளஙக்கிறது.
- வீணா, வேணு மிருதங்கம் எனும் வாத்தியங்களில் முதலாவதாக் கருதப்படுகிறது.
- இந்திய சங்கீதத்தின் பல நுட்பங்களையும், தத்துவங்களையும் வாசிக்கக்கூடியதாக இருப்பதனால் இதனைச் சங்கீத அளவுகோல் என்று கூறுவர்.

- வேதகாலந்தொட்டு வாசிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனாலும் 17 ஆம் நூற்றாண்டிலேயே தற்காலத்து உருவத்தையும் அமைப்பையும் பெற்றது.
- தஞ்சாரவூர் வீணை என்றும் இரகுநாத வீணையென்றும் இது அழைக்கப்படுகின்றது.
- வீணையானது ஒரு நரம்புக் கருவியாகும். சுருதிக்காகவும், தாளத்திற்காகவும் இவ்வாத்தியத்திலேயே 3 தந்திகள் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் இவ்வாத்தியம் "சகல வாத்தியம்" என்று கூறப்டுபகிறது.
- சுருதிகக்காகத் தனியே தந்திகள் பொருத்தப்படாத வாத்தியம் நிஷ்கள வாத்தியம் எனப்படும்.
- ஒரே நேரத்தில் வெவ்வேறு ஸ்தாயிகள் 2, 3 ஸ்வரங்கள் வாசிக்கக்கூடிய வசதியைக் கொண்டுள்ள வாத்தியங்களில் வீணையும் ஒன்று. இதனால் இவ்வாத்தியம் "பஹுத்வனி" வாத்தியம் என்று அழைக்கப்படும்

**அமைப்பு**

- வீணை வாத்தியத்தில் 3 1/2 ஸ்தாயிகள் வாசிக்கலாம்
- நான்கு தந்திகள் வாசிப்பதற்காகவும், 3 தந்திகள் சுருதிக்காகவும், தாளத்திற்காகவும் அமைந்துள்ளன.
- பலா மரத்தினால் இவ்வாத்தியம் செய்யப்படுகிறது.
- இவ்வாத்தியத்தின் பாகங்கள்:
  01).குடம் 02).மேளச்சட்டம் 03).மேற்பலகை 04).மெழுகுச் சட்டம் 05).தண்டி 06).24 மெட்டுக்கள் 07).சுரைக்காய் 08) குதிரைகள் 2 09).பிரடைகள் 10).லஙக்ர் 11).யாழி முகம் 12).நாகபாசம் 13).உருட்டுக்கள் (சிறுவளையங்கள்)
- தண்டியின் ஒரு பக்கத்தில் குடமும்மற்றொரு பக்கத்தில் யாழி முகமும் இணைக்கப் படடிருகக்ும்.
- தண்டியின் மேலாக 2 ஸ்தாயிகளைத் தழுவிய 24 மெட்டுக்கள் செய்யப்பட்டிருக்கும்.
- யாழி முகத்திற்கு அருகிலிருக்கும் சுரைக்காய் ஒரு தாங்கியாகவும் ஒலி பெருக்கும் சாதனமாகவும் பயன்படுகிறது.
- வாசிக்கும் தந்திகள் நான்கும் லங்கர்களின் நுனியிலுள்ள வளையங்களில் முடியப்பட்டு குதிரையின் மேலும், மெட்டுக்களின் மேலும் சென்று பிரடைகளில் பிணைக்கப்பட்டிருக்கும்.
- லங்கர்கள் வீணையின் மூலாதாரம் எனப்படும் நாகபாசத்தில் இணைகக்பப்டடிருககும
- வாசிப்புத் தந்திகள் நான்கின் பெயர்கள்.
  01.ஸாரணி (ஸ) 02.பஞ்சமம் (ப) 03.மந்தரம் (ஸ) 04.அனுமந்திரம் (ப)
  தாளத் தந்திகள் மூன்றின் பெயர்கள்:
  01.பக்க ஸாரணி (ஸ) 02.பக்க பஞ்சமம் (ப) 03.ஹெச்சு ஸாரணி (ஸ்)



kalvi.lk

**சுருதி சேர்க்கும் முறை**

வாசிக்கும் தந்திகளில் ஸாரணித் தந்தியை மத்திம ஸ்தாயி ஸட்ஜத்திற்கும், பஞ்சமத் தந்தியை மந்திரஸ்தாயி பஞ்சமத்திற்கும், மந்தரத் தந்தியை மத்திரஸ்தாயி ஸட்ஜத்திற்கும், அனுமந்தரத் தந்தியை அனுமத்திரஸ்தாயி பஞ்சமத்திற்கும் சுருதி சேர்க்க வேண்டும்.

**வாசிக்கும்முறை**

வீணை வாத்தியத்தில் தானத்தினை சிறப்புற வாசிக்கலாம்.

வாசிக்கும் முறை

:வாசிக்கும் தந்திகளை மீட்டுவதற்கு வலது கையின் ஆள்காட்டி விரலும், நடுவிரலும் தாளத்தந்தி - சுருதித்தந்திகளை மீட்டுவதற்கு வலது கையின் சிறிய விரலும் பயன்படும். இடதுகையின் ஆள்காட்டி விரலும், நடுவிரலும் ஸ்வரஸ்தானங்களை உரிய இடத்தில் தந்திகளில் அழுத்துவதற்கும் பயன்படும்.

**வீணை வாசித்துப் பிரபல்யமடைந்த வித்துவான்கள்**

வீணை தனம்மாள், காரைக்குடி சாம்பசிவம், எஸ். பாலசுந்தர், சிட்டி பாபு ஆவர்.

Education கல்வி අධ්‍යාපන

## புல்லாங்குழல்



**சிறப்பு**

புல்லாங்குழலானது முரளி, வேணு என்னும் வடமொழிப் பெயர்களாலும், குழல் என்னும் தமிழ்ச் சொல்லாலும் குறிப்பிடப்படுகிறது.

உலகின் எல்லாப் பாகங்களிலும் காணப்படும் மிகப்பழமையான துளைக்கருவி புல்லாங்குழலே ஆகும்.

வீணை, வேணு மிருதங்கம் எனப்படும் வாத்தியத்தில் வேணு இரண்டாம் இடத்தை வகிக்கின்றது.

கண்ணபிரான் புல்லாங்குழல் வாசித்ததாகவும், அவரது குழல் இசையில் சகல ஜீவராசிகளும் மயங்கியதாகவும் கூறப்படுகின்றது.



kalvi.lk

**அமைப்பு**

- புலல்ாங்குழலானது மூஙகிலால் செய்யப்பட்ட உருளை வடிவமான நீண்ட குழாயாகும். இது சுமார் 14 அங்குல நீளமும் 3/4 அங்குல விட்டமும் உடைய குழாயாகும். இதன் இடப்பக்கம் மூடப்பட்டும். வலப்பக்கம் திறந்தும் காணப்படும்.
- மூடப்பட்ட முனையில் இருந்து 3/4 அங்குல தூரத்தில் ஊதும் துவாரம் அமைந்துள்ளது. வாய்வைத்து ஊதும் துளைக்கு "முகரந்திரம் அல்லது முத்திரைத் துளை" என்று பெயர்.
- இத்துவாரத்திற்கு நேர்கோட்டில் ஒன்பது ஸ்வரத்துளைகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்துளைகள் ஊதும் துளையை விடச் சற்று சிறியதாக இருக்கும்.

**வாசிக்கும் முறை**

- இடது கைவிரல்களில் கட்டை விரல், சிறுவிரல் தவிர்ந்த மூன்று விரல்களையும், வலது கைவிரல்களில் கட்டை விரல் தவிர்ந்த நான்கு விரல்களையும் 7 துளைகளின் மீது வைத்து முத்திரைத் துளைக்குள் வாயின் வழியாகக் காற்றைச் செலுத்தி, துளைகளை மூடித் திறக்கும் போது இசை உருவாகிறது.
- முகரந்திரத்திற்கு நெருங்கியுள்ள துவாரம் தான் மிக உயர் சுருதியுடைய ஸ்வரத்தை உண்டாக்குவதாகும். இத்துளையானது தாரதந்திரம்' என அழைகக்பப்டுகிறது பொதுவாக
- உதட்டிற்கு வலப்பக்கமே புல்லாங்குழல் வைத்து வாசிக்கப்படுகிறது.
- இவ்வாத்தியத்தில் 2½ ஸ்தாயி வரை வாசிக்கலாம்.

**சுருதி சேர்க்கும் முறை**

- இது சுருதி நிர்ணயிக்கப்பட்ட ஏகத்வனி வாத்தியமாகும்.
- புல்லாங்குழல் செய்வதற்கு மூங்கில், தந்தம், சந்தனமரம், கதிரமரம், கருங்காலி, வெண்கலம் முதலியன பயன்படுத்தப்படுகின்றன. எனினும் மூங்கிற் குழலே மிக இனிமையான இசையை எழுப்பும் தன்மை உடையது.

**பிரபல்யமடைந்தோர்:-** சங்கீத கலாநிதி திருப்பாம்புரம் டி.என்.சுவாமிநாதபிள்ளை, T.R.மகாலிங்கம், ரமணி, T.R.நவனீதம்



kalvi.lk

# ஸப்த ஸ்வரங்கள் பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்கள் ஏற்பட்ட விதம்

- ஸப்த ஸ்வரங்கள் ஏழு ஆகும்.
- ஸரிகமபதநி ஆகிய இவ் ஸ்வரங்களில் ஸட்ஜம், பஞ்சமம் ஆகிய (ஸ,ப) இரண்டு ஸ்வரங்களும் பேதமற்றவை.
- மற்றைய ஸ்வரங்களாகிய ரிசபம், காந்தாரம், மத்திமம், தைவதம், நிசாதம் ஆகிய ஐந்து ஸ்வரங்களும் (ரிகமதநி) கோமள, தீவிரம் பேதங்களாகின்றன. எனவே அவை 5x2=10 ஸ்வரஸ்தானங்களாகின்றன.
- இவற்றுடன் ஸ, ப ஆகிய 2 ஸ்வரங்களையும் சேர்க்கும் போது 12 ஸ்வரஸ்தானங்கள் ஆகின்றன.

## 12 ஸ்வரஸ்தானங்களின் பெயர்களும் அவற்றின் போதங்களும்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஸட்ஜம் | - | ஸ | - | பேதமற்றது |
| 2 | சுத்த ரிசபம் | - | ரி1 | - | கோமளம் |
| 3 | சதுஸ்ருதி ரிசபம் | - | ரி2 | - | தீவிரம் |
| 4 | சாதாரண காந்தாரம் | - | க1 | - | கோமளம் |
| 5 | அந்தர காந்தாரம் | - | க2 | - | தீவிரம் |
| 6 | சுத்த மத்திமம் | - | ம1 | - | கோமளம் |
| 7 | பிரதி மத்திமம் | - | ம2 | - | தீவிரம் |
| 8 | பஞ்சமம் | - | ப | - | பேதமற்றது |
| 9 | சுத்த தைவதம் | - | த1 | - | கோமளம் |
| 10 | சதுஸ்ருதி தைவதம் | - | த2 | - | தீவிரம் |
| 11 | கைசிகி நிசாதம் | - | நி1 | - | கோமளம் |
| 12 | காகலி நிசாதம் | - | நி2 | - | தீவிரம் |



kalvi.lk

# ஜனக ஜன்னிய இராகங்கள், ஜன்யராகப்பிரிவுகள்

## ஜனகராகம்

- இராகங்களை ஜனக ராகம் என்றும், ஜன்னிய ராகம் என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பர்.
- ஜனக ராகம் என்பது தாய் ராகம்.
- இதன் மறுபெயர்கள் மேளகர்த்தாராகம், மேளராகம், கர்த்தாராகம், இராகாங்கராகம், சம்பூர்ண ராகம் என்பவையாகும்.
- ஜனக ராகம் 4 முக்கிய லட்சணங்களைக் கொண்டது.

1. சம்பூர்ண ஆரோகண அவரோகணம்
2. கிரமசம்பூர்ண ஆரோகண அவரோகணம்
3. ஆரோகணத்தில் வரும் ஸ்வரங்கள் அவரோகணத்தில் வருதல்
4. அட்டகமாக விளங்கும் ஆரோகண அவரோகணம்.

- ஜனக ராகங்களின் மொத்த எண்ணிக்கை 72.

உதாரணம் : மாயாமாளவகௌளை, தீரசங்கராபரணம், கல்யாணி, ஹரஹரப்பிரயா, தோடி

## ஜன்னியராகம்

- ஜன்னிய இராகம் என்றால் பிறந்த ராகம் என்று பொருள்.
- இது சேய் ராகம் என்று சொல்லப்படும்.
- ஒவ்வொரு ஜனகராகத்திற்கும் அநேக ஜன்னிய ராகங்கள் உண்டு.
- ஒவ்வொரு ஜன்னியராகத்தின் ஸ்வரங்களும் அதன் ஜனக ராகத்தின் ஸ்வரங்களை அனுசரித்தே இருக்கும்.

## ஜன்னியராகங்களின் பிரிவுகள்

ஜன்னிய ராகத்தின் பிரிவுகள் ஏழு ஆகும். அவையாவன

1. வர்ஜ ராகம்
2. வக்ர ராகம்
3. உபாங்க ராகம்
4. பாசாங்க ராகம்
5. நிசாதாந்திய ராகம்
6. தைவதாந்திய ராகம்
7. பஞ்சமாந்திய ராகம்



kalvi.lk

**வர்ஜ ராகம்**

ஆரோகணத்திலோ அவரோகணத்திலோ அல்லது இரண்டிலுமோ ஒன்று அல்லதுஅதற்கு மேற்பட்ட ஸ்வரங்கள் விலக்கப்பட்டு வரும் ராகம் வர்ஜ ராகம் எனப்படும்.

உதாரணம்-மத்தியமாவதி ஆ -ஸரிமபநிஸ்

அ - ஸ்நிபமரிஸ

இவற்றை விட ஔடவ ஷாடவ ராகங்கள் என்ற பிரிவுகளும் உண்டு.

**ஔடவ ராகம்**

உதாரணம்- மோகனம் ஆ ஸரிகபதஸ் அ ஸ்தபகரிஸ இதைவிட மத்தியமாவதி, சுத்தசாவேரி போன்ற இராகங்களும் உதாரணங்களாகும்.

**ஷடாங்டவ ராகம்**

ஆரோகணத்திலோ அவரோகணத்திலோ அலடலது இரண்டிலுமோ ஒரு ஸ்வரம் விலக்கப்பட்டு ஆறு ஸ்வரம் வந்தால் அது 'ஷாடவ ராகம் எனப்படும்.

**உபாங்க ராகம்**

தாய் ராகத்தில் வரும் ஸ்வரங்களை மட்டும் எடுத்துக் கொள்ளும் ஜன்ய ராகங்களுக்கு உபாங்க ராகம் என்று பெயர்.

உதாரணம்- மோகனம்

**பாஷாங்க ராகம்**

தாய் ராகத்தில் வரும் ஸ்வரங்களையும் எடுத்துக் கொண்டு அன்னிய ஸ்வரத்தையும் அதாவது வேறு மேளத்தைச் சேர்ந்த ஸ்வரத்தையும் எடுத்துக் கொள்ளும் ராகம் பாஷாங்க ராகம் எனப்படும்.

உதாரணம்- : பிலஹரி.

**நிஷாதாந்திய ராகம்**

மத்தியஸ்தாயி நிஷாதத்துக்கு மேல் சஞ்சாரம் இல்லாத ராகம் நிஷாதாந்திய ராகம் எனப்படும்.

உதாரணம்- நாதநாமக்கிரியா ஆ ஸரிகமபதநி

அ நிதபமகரிஸநி



kalvi.lk

**தைவதாந்திய ராகம்**

மத்தியஸ்தாயி தைவதத்துக்கு மேல் சஞ்சாரம் இல்லாத ராகம் தைவதாந்திய ராகம் எனப்படும்.

உதாரணம்-குறிஞ்சி ஆ ஸநிஸரிகமபத
அ தபமகரிஸநிஸ

**பஞ்சமாந்திய ராகம்**

மத்தியஸ்தாயி பஞ்சமத்துக்கு மேல் சஞ்சாரம் இல்லாத ராகம் பஞ்சமாந்திய ராகம் எனப்படும்.

உதாரணம்- நவரோஸ் ஆ பதநிஸரிகமப
அ மகரிஸநிதப

# பண்ணிசை

- இராக தாள அமைபப்டன் கூடிய உருப்படிகளில், மிகப் பழமையானது தேவாரம்
- தற்காலத்தில் வழங்கும் பல இராகங்களுக்குத் தேவாரப் பண்களே ஆதி லட்சியங்களாகும்.
- தேவாரத்தைத் திருவாய் மலர்ந்தருளிய, திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் கி.பி 7ஆம் நூற்றாண்டிலும் சுந்தரமூர்த்திநாயனார் கி.பி 9ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்களாவார்
- தேவாரப் பதிகங்கள் தோன்றும் போதே இசை வடிவங்களுடன் மூவர் வாக்கில் இருந்தும் தோன்றிய சிறப்பை உடையன.
- தேவாரம் என்பது தெய்வத்தனமைம வாயந்த “வாரப்” பாடல்களாகும். இசைத் தமிழைச் சேர்ந்த முதனடை, வாரம், கூடை, திரள் என்னும் நான்கு வகைகளில் ஒன்றாகிய “வாரம்” என்பது சங்கீதத்திலும் சாகித்தியத்திலும் சிறந்து விளங்குகின்றது.
- திருஞானசம்பந்தருக்குப் பொற்றாளம் கிடைத்த வரலாற்றில் இருந்து, தேவாரம் தாளத்துடன் பாடப்பட்டது என்பது தெளிவாகின்றது.
- பண் என்பது இராகம் ஆகும். பண் என்ற பதத்திற்குப் பாட்டு, சம்பூர்ண இராகம் என வேறு இரு பொருள்களும் உண்டு.
- பண்களுக்கு இராகங்களைப் போல் ஸ்வரங்கள், ஜீவ ஸ்வரங்கள், நியாச ஸ்வரங்கள், அந்நிய ஸ்வரங்கள் ரக்திப்பிரயோகங்கள், சொரூபத்தை விளக்கும் நுட்ப சுருதிகள், கமகங்கள் முதலியன உண்டு..

- இராகங்களை ஔடவ, ஷாடவ, சம்பூர்ணம் என்று பிரிப்பதற்கும், பண்களே காரணமாய் இருந்தன.
- இந்திய சங்கீத சரித்திரத்தில் பாஷாங்க இராகம் என்பதை, முதன்முதலாகத் தேவாரப் பண்களிலேயே காண்கிறோம். கௌசிகம் (பைரவி) வியாழக் குறிஞ்சி (சௌராஷ்டிரம்) போன்ற பண்கள் இதற்கு நல்ல உதாரணங்களாகும்.
- மேலும், காந்தார பஞ்சமம் (கேதாரகௌளை) செந்துருத்தி (மத்தியமாவதி) போன்ற பண்கள் உபாங்க் இராகததிறக் உதாரணங்களாகும்.
- செந்துருத்திப் பண்ணினைச் சுநத்ரமூரத்த்தி நாயனாரின் ஒரு பதிகத்திலேயே காணக்கூடியதாயுள்ளது. திருஞானசம்பந்தர் பாடிய "மாதர் மடப்பிடியும்" என்ற பதிகத்திற்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழ் வாசிக்க முடியாது வருந்திய சம்பவத்திலிருந்து, தேவாரம் பாடுகையில் யாழ் பயன்படுத்தப்பட்டமை தெளிவாகின்றது.
- 24 பண்களும், பண்களுக்குச் சமமான கர்நாடக இராகங்களும் பின்வருமாறு:
- பண் இராகம் பஞ்சமம் - ஆஹிரி சீகாமரம் - நாதநாமக்ரிய புறநீர்மை - பூபாளம் வியாழக் குறிஞ்சி - சௌராஷ்டிரம் கௌசிகம் - பைரவி செந்துருத்தி - மத்தியமாவதி காந்தார பஞ்சமம் - கேதாரகௌளை அந்தாளிக் குறிஞ்சி - ஸாமா தக்கேசி, தக்கராகம் - காம்போதி செவவ்ழி - யதுகுலகாம்போஜி பழம்பஞ்சுரம் - சங்கராபரணம் கொல்லி, கொல்லிக் கௌவாணம் -குறிஞ்சி - நீலாம்பரி நட்டபாடை - கம்பீரநாட்டைஸாதாரி, நட்டராகம் - பந்துவராளி யாழ்முரி - அடாணா இநத்ளம் - மாயாமாளவகௌளை பழந்தக்கராகம் - ஆரபி குறிஞ்சி - ஹரிகாம்போஜி
- திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம், ஹரிகாம்போஜி இராகத்திலும் திருவாசகம் மோகன இராகத்திலும் பாடப்பட்டு வருவது மரபாகும்.
- பண் என்பதை தாய் இராகம் என்றும், திறம் என்பதை ஜன்யராகம் என்றும் கூறுவர்.
- தேவாரப் பதிகங்கள், தற்போது 24 பண்களில் அமைந்துள்ளன. பண்கள் பாடப்பட வேண்டிய கான காலத்தைக் கொண்டு பகற்பண், இராப்பண், பொதுப்பண் எனப் பிரிக்கப்பட்டுள்ளன.
- பண் - சம்பூர்ண ராகம் பண்ணியம் - ஷாடவ இராகம் திறம் - ஔடவ இராகம் திறந்திறம் - ஸ்வராந்தர இராகம் என்றும் கூறப்படும்
- சோழ அரசர்கள், சிவநெறிச் செல்வர்களாக இருந்து ஆலயங்களில் ஓதுவார்களை அமர்த்தி, அவர்கள் மூலம
- தேவாரப் பதிகங்களை நாடு முழுவதும் பரப்பும் பணியில் ஈடுபட்டனர். சோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பியால் 12 திருமுறைகளாக தொகுத்துள்ளார்



kalvi.lk

# சாபு தாள வகைகள்

சாபுதாளம் நான்கு வகைப்படும். அவையாவன

1. திஸ்ரசாபு தாளம்
2. கண்டசாபு தாளம்
3. மிஸ்ரசாபு தாளம்
4. சங்கீர்ணசாபு தாளம்

**திஸ்ரசாபு தாளம்**
இது ஆவர்த்தனத்துக்கு (1+2=3) மூன்று எண்ணிக்கைகளையுடையது.
முதல் தட்டுக்கு ஒரு எண்ணிக்கையும்இ இரண்டாம் தட்டுக்கு இரண்டு எண்ணிக்கைகளும் ஆகும்.
திஸ்ர சாபு தாளத்திற்கான **ஜதி தகிட** என்பதாகும்.

**கண்டசாபு தாளம்**
இது ஆவர்த்தனத்துக்கு (2+3=5) மூன்று எண்ணிக்கைகளையுடையது.
முதல் தட்டுக்கு இரண்டு எண்ணிக்கையும்இ இரண்டாம் தட்டுக்கு மூன்று எண்ணிக்கைகளும் ஆகும்.
கண்டசாபு தாளத்துக்கான ஜதி **தகதகிட** என்பதாகும்.

**மிஸ்ரசாபு தாளம்**
இது ஆவர்த்தனத்துக்கு (3+4=7) மூன்று எண்ணிக்கைகளையுடையது.
முதல் தட்டுக்கு மூன்று எண்ணிக்கையும்இ இரண்டாம் தட்டுக்கு நான்கு எண்ணிக்கைகளும் ஆகும்.
மிஸ்ரசாபு தாளத்துக்கான ஜதி **தகிடதகதிமி** என்பதாகும்.

**சங்கீர்ணசாபு தாளம்**
இது ஆவர்த்தனத்துக்கு (4+5=9) மூன்று எண்ணிக்கைகளையுடையது.
முதல் தட்டுக்கு நான்கு எண்ணிக்கையும்இ இரண்டாம் தட்டுக்கு ஐந்து எண்ணிக்கைகளும் ஆகும்.
சங்கீர்ண தாளத்துக்கான ஜதி **தகதிமிதகதகிட** என்பதாகும்.

# ஷடாங்கம்

தாளத்தில் 6 அங்கங்கள் உண்டு. அவை ஷடங்கம் எனப்படும்.

2. த்ருதம்
3. அனுத்ருதம்
4. குரு
5. புலுதம்
6. காகபாதம்

இதில் முதல் மூன்று அங்கங்களாகிய லகு, த்ருதம், அனுத்ருதம் ஆகிய மூன்றும் சேர்ந்து திரியாங்கம் எனப்படும். சப்த தாள அலங்காரங்களில் இந்த மூன்று அங்கங்களும் வருகின்றன. இம் மூன்று அங்கங்களின் அங்க அடையாளம், அட்சரகாலம், செய்கைமுறை பின்வருமாறு அமையும்.

## திரியாங்க அட்டவணை

| இல | அங்கத்தின் பெயர் | அங்க அடையாளம் | அட்சர எண்ணிக்கை | செய்கை |
|---|---|---|---|---|
| 1 | அனுத்துருதம் | U | 1 | கையை ஒருமுறை தட்டுதல் |
| 2 | த்ருதம் | O | 2 | கையை ஒருமுறை தட்டி வீசுதல் |
| 3 | லகு | I | ஜாதிகளுக்கேற்ப எண்ணிக்கை மாறுபடும் | கையைத் தட்டி விரல்களை எண்ணுதல் |

### லகு

லகு 5 ஜாதி பேதங்களை உடையது. அவை முறையே 3,4,5,7,9 அட்சரங்களைக் கொண்டது. அவற்றின் பெயர்கள் முறையே
திஸ்ர லகு, சதுஸ்ர லகு, கண்ட லகு, மிஸ்ர லகு, சங்கீர்ண லகு.

| இல | லகுவின் வகை | குறியிடு | அட்சர எண்ணிக்கை | செய்கை |
|---|---|---|---|---|
| 1 | திஸ்ர லகு | $I_3$ | 3 | 1 தட்டும் 2 விரல் எண்ணிக்கைகளும் |
| 2 | சதுஜ்ர லகு | $I_4$ | 4 | 1 தட்டும் 3 விரல் எண்ணிக்கைகளும் |
| 3 | கண்ட லகு | $I_5$ | 5 | 1 தட்டும் 4 விரல் எண்ணிக்கைகளும் |
| 4 | மிஸ்ர லகு | $I_7$ | 7 | 1 தட்டும் 5 விரல் எண்ணிக்கைகளும் |
| 5 | சங்கீர்ண லகு | $I_9$ | 9 | 1 தட்டும் 6 விரல் எண்ணிக்கைகளும் |

### த்ருதம்

ஒருமுறை தட்டித் திருப்புதல் (வீசுதல்) த்ருதம் எனப்படும். இதன் அட்சரம் இரண்டு. இதன் குறியீடு O.



kalvi.lk

**அனுதிருதம்**

ஒரு தட்டுத் தட்டுதல் அனுத்ருதம் எனப்படும். இதன் அட்சரம் ஒன்று. இதன் குறியீடு U.

## ஸப்த தாளங்களும் அங்க அடையாளங்களும்

| இல | தாளத்தின் பெயர் | அங்க அடையாளம் | அங்கத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | துருவ தாளம் | IoII | லகு த்ருதம், லகு, லகு |
| 2 | மட்டிய தாளம | IoI | லகு த்ருதம், லகு |
| 3 | ரூபக தாளம் | oI | த்ருதம், லகு |
| 4 | ஜம்பை தாளம் | IUO | லகு அனுத்ருதம், த்ருதம் |
| 5 | திரிபுடை தாளம் | IOO | லகு, த்ருதம், த்ருதம் |
| 6 | அட தாளம் | IIOO | லகு, லகு, த்ருதம், த்ருதம் |
| 7 | ஏக தாளம | I | லகு |

Education கல்வி

## முப்பத்தைந்து தாள விளக்கம்

திரியாங்கங்கள் ஆகிய அனுத்ருதம், த்ருதம், லகு என்பவற்றில் ஜாதி பேதமடையும் அங்கம் லகுவாகும், லகுவானது திஸ்ரஜாதி, சதுஸ்ரஜாதி, கண்டஜாதி, மிஸ்ரஜாதி, சங்கீர்ணஜாதி என்னும் ஐந்து ஜாதிகளை உடையது. ஸப்த தாளங்கள் ஏழும் லகுவின் 5 ஜாதி பேதங்களினால் தாளங்கள் **7 X5= 35** ஆகின்றன.

உதாரணமாக :- துருவதாளத்தை எடுத்துக் கொண்டால் அது
1. திஸ்ரஜாதி துருவதாளம் 2. சதுஸ்ரஜாதி துருவதாளம் 3. கண்டஜாதி துருவதாளம்
4. மிஸ்ரஜாதி துருவதாளம் 5. சங்கீர்ணஜாதி துருவதாளம் என விரிவடையும்

| | | |
|---|---|---|
| திஸ்ரஜாதி துருவதாளம் | $I_3$ 0 $I_3$ $I_3$ | = 11 |
| சதுஸ்ரஜாதி துருவதாளம் | $I_4$ 0 $I_4$ $I_4$ | = 14 |
| கண்டஜாதி துருவதாளம் | $I_5$ 0 $I_5$ $I_5$ | = 17 |
| மிஸ்ரஜாதி துருவதாளம் | $I_7$ 0 $I_7$ $I_7$ | = 23 |
| சங்கீர்ணஜாதி துருவதாளம் | $I_9$ 0 $I_9$ $I_9$ | = 29 |

இவ்வாறே மட்டியதாளமும், ரூபதாளமும், ஜம்பை தாளமும், திரிபுடை தாளமும், அடதாளமும், ஏகதாளமும் விரிவடைந்து 35 தாளங்களாகின்றன லகுவிற்கு மட்டுமே ஜாதி பேதங்கள் உண்டு. துருதத்திற்கும் அனுத்ருதத்திற்கும் பேதம் கிடையாது.

# உருப்படி இலட்சணங்கள்

## பதம்

- அபிநயத்திற்காக நாயக நாயகி பாவமாக இயற்றப்பட்ட உருப்படிகள் பதங்களென அழைக்கப்பட்டும்.
- பதங்களை இயற்றிய வாக்கேயகாரர்கள் பதங்களில் வரும் நாயகன், நாயகி, சகி என்னும் பாத்திரங்கள் வாயிலாகத் தத்துவ உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.
- நாயகன் பரமாத்வாகவும், நாயகி ஜீவாத்மாகவும், தோழி குருவாகவும் (மதுர பாவம்) நின்று விண்ணகம் அடைய உதவுகின்ற உண்மைகளை நமக்குப் பதங்கள் உணர்த்துகிறது
- நாட்டியத்திற்காக ஏற்பட்ட உருப்படிகள் ஆகும்.
- சிருங்கார ரசமும், பக்தி ரசமும் அதிகம் பிரதிபலிக்கும.
- நாயகிகளும், சகிகளும் (தோழிகள்) பாடும் பதங்களே பெரும் பாலும் இருப்பினும் நாயகனால் பாடப்படும் பதங்களும் உள.
- பகிர் சிருங்காரம் (கௌரவ சிருங்காரம்) அந்தர் பக்தி என்னும் இரட்டைத் தாற்பரியத்துடன் கூடிய சாகித்தியமே பதத்தின் விசேட அம்சமாகும்.
- நகைச்சுவைப் பதங்களும் இயற்றப் பட்டுள்ளன. இசைப் புலவர்களை ஆதரித்த பிரபுக்களைப் பற்றியும் சிலர் பதங்களைஇயறறியுளள்னர்.
- பதம், பலல்வி, அனுபலல்வி, சரணங்க்ள் என்னும் அங்கங்களைக் கொண்டது.
- சில பதங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட சரணங்களும் உண்டு.
- இராக பாவம் ததும்பும் பதங்கள் பெரும்பாலும் சௌக்காலத்திலேயே பாடப்படும்.
- சாகித்தியம் சுலபமாகவும், கிராமியச் சொற்களைக் கொண்டவையாகவும் பதங்கள் விளங்குகின்றன.
- அனுபலல்வியிலோ, கடைசிச் சரணததிலோ இயறறியவரின் முத்திரை காணப்படும்.
- பதங்களை இயற்றுவோருக்குச் சாஸ்திர ஞானமும், கவித்துவமும், இராக ரஸ உணர்ச்சியும் இருப்பது மிக்க அவசியம்.
- பெரும்பாலும் தமிழப்பதங்கள் முருகக் கடவுள் மேலும் தெலுங்குப் பதங்ககள் கிருஷ்ணபிரான் மேலும் பாடப்பட்டுள்ளன.

**பதங்களை இயற்றியவர்கள்**

- தெலுங்குப் பதங்களை இயற்றியவர்கள்: ஷேத்ரக்ஞர், பரிமளரங்கர், கஸ்தூரிரங்கர்.
- தமிழ்ப் பதங்களை இயற்றியவர்கள்: முத்துத்தாண்டவர், கவிக்குஞ்சபாரதி, கனம் கிருஷ்ணய்யர், ஊத்துக்காடு வெங்கட ஸுப்பையர்

உதாரணங்கள் சில :

1. வேலவரே - பைரவி
2. தெருவில் வாரானோ - கமாஸ்

# வர்ணம்

- வர்ணம் அப்பியாச கானத்துக்கும், சபாகானத்துக்கும் பொதுவான உருப்படியாகும்
- வர்ணம் அப்பியாச கானத்தைச் சேர்நத உருப்படிகளில் மிகவும் முக்கியமானது.
- இராகங்களில் பாவத்தைக் காட்டும், ரஞ்சகப் பிரயோகங்களையும், தாட்டு ஸ்வரப் பிரயோகங்களையும், அபூர்வ சஞ்சாரங்களையும், விசேட சஞ்சாரங்களையும் அந்தந்த வர்ணங்களில் காணலாம்..
- வர்ணங்களை அப்பியாசம் செய்வதனால் உருப்படிகளை அழகுபடுத்தி பொருளுடனும் கமகத்துடனும் வாடுவதற்கும், வாசிப்பதற்கும் ஏதுவாக இருக்கிறது.
- வர்ணங்களைப் பாடுவதங்கு விசேட திறமையும், கற்பனாசக்தியும், தெளிவான ஞானமும் வேண்டும்.
- வர்ணத்தில் சாகித்தியம்சொற்பமாக இருக்கும்.
- இதன் சாகித்தியம், பக்தியாகவோ, சிருங்கார பாவமாகவோ, சங்கீத வித்துவான்களை ஆதரித்த பிரபுக்களைப் புகழ்வதாகவோ அமைந்திருக்கும் வர்ணத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. பூர்வாங்கம் 2. உத்தராங்கம்

**பூர்வாங்கம்**

பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம் என்னும் அங்கங்களையுடையது.

**உத்தராங்கம்**

- சரணம், சரண ஸ்வரங்களைக் கொண்டிருக்கும்.
- சரணத்துக்கு உபபல்லவி, எத்தகடைப்பல்லவி, சிட்டைப்பல்லவி என்ற பெயர்களும் உண்டு.
- சரண ஸ்வரங்களுக்கு எத்துக்கடை ஸ்வரங்கள், சிட்டை ஸ்வரங்கள் என்ற பெயரும் உண்டு.
- வர்ணம் இரு வகைப்படும். அவையாவன

1. தானவர்ணம் 2. பதவர்ணம்



kalvi.lk

## தானவர்ணம்

- தான ஜாதி சஞ்சாரங்களுடன் பிரகாசிக்கும் உருப்படியே தானவர்ணமாகும். தான வர்ணங்களில் பல்லவி, அனுபல்லவி, சரணத்துக்கு மட்டும் சாகித்தியம் உண்டு.
- அதுவும் சொற்பமாகவே இருக்கும்.
- அப்பியாச கானத்தைச் சேர்ந்த உருப்படி எனினும் சபாகானத்திலும் இடம் பெறுகிறது.
- இராகங்களின் பாவத்தைக் காட்டும் ரஞ்சகப் பிரயோகங்களையும், அவற்றில் விஷேட சஞ்சாரங்களையும் இந்த உருப்படிகளில் காணலாம்.
- இதன் சாகித்தியம் பக்தி விடயமாகவோ, சிருங்கார விடயமாகவோ சங்கீத வித்துவான்களை ஆதரித்த பிரபுக்களைப் போற்றிப் பாடுவதாகவோ அமைந்திருக்கும்.
- தான வர்ணங்களை இரண்டு காலங்களிலும் பாடவும், வாசிக்கவும் செய்யலாம்.
- கச்சேரிகளில் பாடலாம். கச்சேரியின் ஆரம்பத்தில் வர்ணத்தைப் பாடுவதால் சீக்கிரம் களை கட்டும்.
- கேட்போருக்கும் பாடுவோருக்கும் விறுவிறுப்பைத் தரும்.
- சில வர்ணங்கள் இராகமாலிகையாகவும் அமைந்துள்ளன.
- ஆதி, அடதாளம் போன்றவற்றில் பெரும்பாலும் தான வர்ணங்கள் அமைந்துள்ளன.

தான வர்ணம் செய்த வாக்கேயகாரர்

1. பச்சமிரியம் ஆதியப்பர்
2. சியாமா சாஸ்திரிகள்
3. இராமநாதபுரம் ஸ்ரீனிவாசய்யங்கார்

தானவர்ணம் உதாரணம்

1. அன்னமே ஆரபி ஆதி தாளம்
2. நெரநம்மிதி கானடா அடதாளம்

## பதவர்ணம்

- இவை நாட்டியத்திற்காக ஏற்பட்ட உருப்படியாகும்.
- இது சௌக்க காலத்திலேயே அமைந்துள்ளன.
- சில பதவர்ணங்கள் மத்திம காலத்திலும் அமைந்துள்ளன.
- பதவர்ணங்களில் தாது ஆடுவதற்குத் தகுந்ததாகவும், மாது அபிநயத்துக்குத் தக்கதாகவும் அமைந்திருக்கும்.
- பதவர்ணங்களை சௌக்கவர்ணம், ஆடவர்ணம் என்றும் அழைக்கப்படும். ஜதிகள் உள்ள பதவர்ணங்களும் உள்ளன.
- அவை பத ஜதி வர்ணம் என அழைக்கப்படும்.

- பதவர்ணத்தின் சகல அங்கங்களுக்கும் சாகித்தியம் உண்டு.
- சரணத்தைத் தொடர்ந்து வரும் சரண ஸ்வரங்களைப் பாடி, சாகித்தியம் பாட வேண்டும்.
- பதவர்ணங்கள் அநேகமாக ஆதி, ரூபக தாளங்களில் தான் அமைக்கப்பட்டுள்ளன.

## இராகமாலிகை

- பல இராகங்களால் தொகுக்கப்பட்ட உருப்படி இராகமாலிகை ஆகும்
- உருப்படிகளில் மிகச்சிறப்பானது
- இராகமாலிகைகளாக அமைந்த கீர்த்தனைகளும் வர்ணங்களும் ஜதீஸ்வரங்களும் உள்ளன
- ஸ்லோகம் பத்யம் விருத்தம் போன்றவையும் இராகமாலிகையாகப் பாடப்படும்
- பல்லவி அனுபல்லவி சரணம் என்ற அங்கங்களை உடையது
- இராகமாலிகைகளில் இராகமுத்திரை காணப்படும் உதாரணம் சாரங்கன் மருகனே நெஞ்சினில் நிறைந்திடும் ரஞ்சனி நீயே
- சரணங்களின் முடிவிலும் அனுபல்லவியின் முடிவிலும் அந்தந்த இராகங்களுக்கு பொருத்தமாக சிட்டைஸ்வரம் அமைக்கப்பட்டிருக்கும்
- இராகமாலிகையின் முடிவில் எல்லா இராகங்களிலும் ஸ்வரங்கள் பாடப்பட்டு முடிக்கப்படும் இவ் விலோம சிட்டைஸ்வரம் இராகமாலிகையின் அழகுக்கு மகுடம் போல் விளங்குகிறது
- இதன் சாகித்தியம் பக்திரஸம் அல்லது சிருங்கார ரஸம் பொருந்தியதாக இருக்கும்
- ஒரு இராகமாலிகையில் குறைந்தது நான்கு இராகங்களாவது இருக்க வேண்டும்
- கச்சேரிகளில் பாடுவதற்கு ஏற்றவை பண்டைக்காலத்தில் இராக கதம்பம் என அழைக்கப்பட்டது
- பல்லவியின் ஆரம்ம இராகத்தில் அமையும் சிட்டைஸ்வரத்திற்கு மகுடஸ்வரம் என்ற பெயர் அதற்கு சாகித்தியம் இருந்தால மகுட சாகித்தியம்

**உதாரணங்கள்**

- பாவயாமி ரூபகம்
- ஆரபிமானம் ஆதி

**இயற்றியோர்**

முத்துஸ்வாமிதீட்சிதர்
ஸ்வாதித்திருநாள்



kalvi.lk

# இந்தியாவின் 7ஆம் 8ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி

- கி.பி 7ஆம், 8ஆம் நூற்றாண்டு பல்லவராட்சிக் காலப்பகுதியாகும்
- சங்கமருவிய காலப் பகுதியின் ஆரம்பத்தில் சைவம், வைணவம், சமணம், சாக்கியமாகிய நால்வகைச் சமயங்களும் பகைமையின்றி வளர்ந்து வந்தன. எனினும் அக்கால முடிவில் சமண சமயமே உயர்நிலை பெற்றிருந்தது.
- சைவமும் வைணவமும் அக்காலத்தில் ஒன்றுபட்டு நின்றிருந்த காரணத்தால் பரவிக்கொண்டு சென்ற சமண சமயத்தை எதிர்க்கும் ஆற்றலை அவை பெற்றிருந்தன.
- சமண சமயத்தைத் தழுவிய மகேந்திரவர்மனை திருநாவுக்கரசரும் நின்ற சீர் நெடுமாறனைத் திருஞானசம்பந்தரும் சைவர்களாக்கிய காலந்தொடடுச் சைவமும் வைணமும் மீண்டும் தழைக்லாயின.
- சைவதத்திற்கும் வைணவதத்திற்கும் புத்துயிரளிதத்வர்கள் முறையே நாயன்மார்களும் ஆழ்வார்களுமாவார்.
- நாயன்மார்கள் இசையைத் தெய்வ வழிபாட்டுடன் இறுகப் பிணைத்தனர்.
- சம்பந்தருக்குப் பொற்றாளம் கிடைத்த வரலாற்றில் இருந்து தேவாரம் தாளத்துடன் பாடப்பட்டது என்பது தெளிவாகத் தெரிகின்றது.
- இசை மட்டுமன்றிச் சிற்பம், ஓவியம், நடனம் முதலிய நுண்கலைகள் அவர் காலத்தில்உயர்நிலைபெற்றிருந்தனவென்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு.
- பல்லவர் காலத்துப் பெருங்கோவில்களில் நடன மண்டபம், தருக்க மண்டபம் முதலிய பல மண்டபங்கள் அமைக்கப்பட்டதிலிருந்து அக்கோவில்கள் சமயக்கல்வி, சாத்திரக்கல்வி, இசை, நடனம் முதலியவை வளர்த்தற்குரிய இடங்களாகவும் விளங்கின என்பது தெளிவாகின்றது.
- எல்லாச் சமயத்தவரும் தத்தம் மதங்களை வளர்த்தற் பொருட்டுப் பல்லவ மன்னர் பல மடங்களைக் கட்டினர். இம்மடங்கள் அறிவு வளர்ச்சிக்கும், கலை வளர்ச்சிக்கும், கலை விருத்திக்கும் பெரிதும் பயன்பட்டன.
- பல்லவர் காலத்து மன்னர்களும் ஆலயங்களில் இன்னிசைப் பண் வளர அயராது உழைத்தனர்.
- தேவாரப் பண்களைப் பண்ணோடு பாட மன்னர் பேராதரவு வழங்கியமை குறிபப்பிடதத்கக்து.
- மகேந்ரதிரவர்மன் “விசித்திர சித்த”, ”சஙக்ரீண்” முதலிய பல விருதுகளைப் பெற்றுள்ளான்.
- சங்கீர்ண என்ற தாள வகையைக் கண்டு பிடித்தமை யாலேயே இவ்விருதுப் பெயர் கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது.
- குடுமியாமலை இசைக் கல்வெட்டும் மன்னனுடைய இசைப் புலமைக்குத் தக்க சான்றாகும். திருமயம் இசைக் கல்வெட்டும் இசை வளர்ச்சியினை எடுத்துக் காட்டுகிறது.
- இறை வழிபாட்டிற்குச் சிறப்பாக உரிய தோத்திரப் பாமாலைகள் பதிகம் முதலிய முறையில் வெளிவந்தமையால் ஒரு புதிய இலக்கிய மரபு தமிழ் மொழியில் ஆரம்பித்தது.
- இச்சங்கம், சங்கருவிய காலப் பகுதிகளில் பெருவழக்காயிருந்த அகத்திணை மரபையும் நாயன்மாரும் ஆழ்வார்களும் கைவிடவில்லை.



kalvi.lk

- திருநாவுக்கரசரின் "முன்னம் அவளுடைய நாமம் கேட்டாள்" திருஞானசம்பந்தரின் "சிறையாரும்மடக்கிளியேமாணிக்கவாசகரின் திருவெம்பாவைப் பாடல்கள் போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.
- தமிழ் நாட்டில் வழங்கி வந்த நாட்டுப்பாடல் வகைகளைத் தழுவிப் பல பதிகங்கள் பல்லவர் காலப் பகுதியில் பாடப்பபட்டுள்ளன.
- தேவார திருப்பதிகங்கள் பெரும்பாலும் நாட்டு மக்கள் இறைவனை வழிபடும் போது ஓதுவதற்கு இயற்றப்பட்டனவாதலின், நாயன் மார்களும், ஆழ்வார்களும் நாட்டுப்பாடல் முறையில் அவற்றைப் பாடினார்கள் எனக் கருத இடமுணடு.
- திருவாசகத்தில் உள்ள திருவம்மானை, திருச்சாழல், திருப்பொன்னூசல் முதலிய பதிகங்களும், பெரியாழ்வார் பாடியருளிய (கண்ணன் குழல் வாரக் காக்கையை அழைதத்தல்) முதலிய பதிகங்களும் இதற்கு உதாரணங்களாகும்.
- சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருப்பதிகங்களுள் சிலவும் நாட்டுப் பாடல்களிலுள்ள இசை முறை தழுவி அமைந்துள்ளனவாகக் காணப்படுகின்றன

## இந்தியாவின் 14ஆம் 15ஆம் நூற்றாணடின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி

- 14ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஹரிபாலர் என்பவரால் எழுதப்பட்ட "சங்கீதஸுதாகரம்" என்னும் நூலில் தான் முதன் முறையாக இந்திய சங்கீதத்தில் ஏற்பட்ட இரு பிரிவுகள் பற்றி காணப்படுகின்றது.
  அவையாவன,
  1. கர்நாடக சங்கீதம்
  2. ஹிந்துஸ்தானி சங்கீதம்

- அதற்கு முன்னர் இந்தியா முழுவதிலும் ஒரே சங்கீதமே வழக்கத்திலிருந்தது
- 14ஆம் நூற்றாண்டில் வடக்கில் முஸ்லிம் மன்னர்களின் ஆதிக்கம் இருந்த காலத்தில் பாரசீகம், அரேபியா போனற் நாடுகளில் இருந்து வந்த சங்கீத முறைகள் இந்திய சங்கீதத்தில் கலந்ததன் காரணமாக வடஇந்தியாவில் ஏற்கெனவே இருந்து வந்த சங்கீத முறை மாறுதல் பெற்றது.
- ஆயினும் தென்இந்தியாவில் பூர்வீகமான முறையே தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்தது.
- அயல்நாட்டு முறை கலந்த வட இந்திய சங்கீதம் ஹிந்துஸ்தானி சங்கீதம் எனவும் பூர்வீக பத்ததியினையே தொடர்ந்து பேணப்பட்ட தென்னிந்திய சங்கீதம் கர்நாடக சங்கீதம் எனவும்அழைக்கப்பட்டது
- கி.பி 15 ஆம் நூற்றாண்டில் தாளப்பாக்கம் சின்னையாவும் அவரது முன்னோர்களும் தெலுங்கு மொழியில் சுமார் 20,000 கீர்த்தனைகளும், வேறும் பல உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகளும் இயற்றிப் பஜனைப் பத்ததிக்கு வழிவகுத்தனர்.
- தாளப்பாக்கம் சின்னையா பஜனைப் பத்ததியின் தந்தையாவார்.
- தாளப்பாக்கம் அன்னமாச்சாரியாரின் (1408 -1503)அத்யாத்ம சங்கீத கிரந்தங்களில் முதன் முதலில் பல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்களைக் காண்கிறோம். இவருடைய



kalvi.lk

- பேரனாகியதாளப்பாக்கம்சின்னையாவின்கிருதிகளிலும் பின்னர் புரந்தரதாஸரின் கிருதிகளிலும் அனுபல்லவி என்னும் அங்கத்தையும் முதனமுதலில ் காணகிறோம்.
- பலல்வி, அனுபலல்வி, சரணம் என்னும் பெயர்கள் வருவதற்கு முன்னர் பிரபந்தங்களின் அங்கங்களுக்கு உத்க்ருஹம், த்ருவம், மேளாபகம், ஆபோகம் என்னும் பெயர்கள் வழக்கில் இருந்தன.
- அருணகிரிநாதர் சந்தங்களை அமைத்துத் தமிழ் மொழியில் ஆயிரக்கணக்கான திருப்புகழ் பாடல்களை இயற்றினார்.
- திருப்புகழ் பாடல்கள் சாதாரண தாளங்களிலும், அபூர்வ தாளங்களிலும் பல்வேறு நடைகளிலும் அமைந்துள்து
- இவை சந்தக் கனிவும், ஓசைச் சிறப்பும் அமையப்பெற்று இருபப்தால் “வாக்கிற்கு அருணகிரிநாதர்” என்று பாராட்டப்படுகிறார்.
- அதிகம் வழக்கில் இல்லாத அநேக தாளங்களைப் பயன்படுத்தியமையால் “சந்தப் பாவலர் பெருமான்” எனப் போற்றப்படுபவர்.
- 35 தாளம், 175 தாளம், 108 தாளம் ஆகிய தாளங்களின் அமைப்புக்கள் எல்லாவற்றையும் இவரது பாடல்களிலே காணலாம்.
- இந்திய சங்கீதத்தில் உள்ள பல தாளங்கள் அழிந்து போகாமல் திருபப்புகழ் மூலம் பாதுகாததததவர் அருணகிரிநாதரே.

## இசைக் குறியீடுகள்

- கர்நாடக இசையில் ஒருபாடலை எழுதுவதற்குப் பல குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் ஒரு உருப்படியை இலகுவாகக் கற்றுக் கொள்ள முடிகிறது. முக்கியமான சில குறியீடுகள் பின்வருமாறு அமையும்

### காலப்பிரமாணம்

- முதலாம் காலத்தில் பாடவேண்டிய ஸ்வரங்களின் மேலோ கீழோ எதுவித கோடுகளும் இன்றிக் காணப்படும். உதாரணம்:- ஸரிகமபதநிஸ் - 8 அட்சரகாலம்

- இரண்டாம் காலத்தில் பாடவேண்டிய ஸ்வரங்கள் ஸ்வரங்களுக்கு மேல் ஒரு படுக்கைக் கோடு இட்டுக் காண்பிக்கப்படும்.

  உதாரணம்:- $\overline{\text{ஸரிகமபதநிஸ்}}$ - 4 அட்சரகாலம்

- மூன்றாம் காலத்தில் பாடவேண்டிய ஸ்வரங்கள் ஸ்வரங்களுக்கு மேல் இரண்டு படுக்கைக் கோடு இட்டுக் காண்பிக்கப்படும்.

  உதாரணம்:- $\overline{\overline{\text{ஸரிகமபதநிஸ்}}}$ - 2 அட்சரகாலம்

### ஸ்தாயி

- மத்திய ஸ்தாயி ஸ்வரங்களின் மேலோ கீழோ எதுவித புள்ளிகளும் இன்றிக் காணப்படும். உஆம்: ஸரிகம



kalvi.lk

- கீழ் ஸ்தாயி ஸ்வரங்கள் ஸ்வரங்களுக்கு கீழ் ஒரு புள்ளியிட்டுக் காண்பிக்கப்படும
  உதாரணம்:- நிதபம
  . . . .

- மேல் ஸ்தாயி ஸ்வரங்கள் ஸ்வரங்களுக்கு மேல் ஒரு புள்ளியிட்டுக் காண்பிக்கப்படும்.
  . . . .
  உதாரணம்- ஸரிகம

- அனுமந்திர ஸ்தாயி ஸ்வரங்களுக்கு கீழ் இரு புள்ளிகள் இட்டுக் காண்பிக்கப்படும
  உதாரணம்:- நி த ப ம
  .. .. .. ..

- அதிதார ஸ்தாயி ஸ்வரங்களுக்கு மேல் இரு புள்ளிகள் இட்டுக் காண்பிக்கப்படும்
  .. .. .. ..
  ஊதாரணம்:- ஸரிகம

## குறில் நெடில் ஸ்வரம்

குறுகிய (குறைந்த) ஓசையை உடைய ஸ்வரம் குறில் ஸ்வரமாகும்.
ஸ – குறில் ஸ்வரம்

நீண்ட (கூடிய) ஓசையை உடைய ஸ்வரம் நெடில் ஸ்வரமாகும்.
ஸா – நெடில் ஸ்வரம்

## கார்வை

| குறியீடு | அட்சரகாலம் |
|---|---|
| , | 1 அட்சரகாலம் |
| ; | 2 அட்சரகாலம் |
| ஸா, | 3 அட்சரகாலம் |
| ஸா; | 4 அட்சரகாலம் |

## லகு

தட்டும் விரல் எண்ணிக்கைகளையும் கொண்டது. ஜாதி பேதங்களுக்கேற்ப மொத்த அட்சரம் 3,4,5,7,9 ஆக மாறும்.

| இல | லகுவின் வகை | குறியிடு | அட்சர எண்ணிக்கை | செய்கை |
|---|---|---|---|---|
| 1 | திஸ்ர லகு | $I_3$ | 3 | 1 தட்டும் 2 விரல் எண்ணிக்கைகளும் |
| 2 | சதுஜ்ர லகு | $I_4$ | 4 | 1 தட்டும் 3 விரல் எண்ணிக்கைகளும் |
| 3 | கண்ட லகு | $I_5$ | 5 | 1 தட்டும் 4 விரல் எண்ணிக்கைகளும் |
| 4 | மிஸ்ர லகு | $I_7$ | 7 | 1 தட்டும் 5 விரல் எண்ணிக்கைகளும் |
| 5 | சங்கீர்ண லகு | $I_9$ | 9 | 1 தட்டும் 6 விரல் எண்ணிக்கைகளும் |

**த்ருதம்** (திருதம், துருதம்)
இதன் செய்கை ஒருமுறை கையைத் தட்டித் திருப்புதல்.

மொத்த அட்சரம் இரண்டு. இதன் குறியீடு O

**அனுதிருதம்**
இதன் செய்கை ஒருமுறை கையைத் தட்டுதல் ஆகும். மொத்த அட்சரம் ஒன்று. இதன் குறியீடு U

**அங்க முடிவு** - |
ஒரு தாளத்தின் ஒரு அங்க முடிவைக் காட்டும் செங்குத்தான ( | ) ஒரு கோடு அங்க முடிவாகும்.

உ-ம்: ஸரி | காமா
கண நாதா

**அன்னிய ஸ்வரம்** - *
பாஷாங்க ராகங்களில் வரும் அன்னிய ஸ்வரம் ( * ) நட்சத்திரக் குறியீட்டில் காண்பிக்கப்படும். உ-ம்: பத*நிபா – பிலஹரி

**அசைவு (கமகம்)**
ஸ்வரங்களின் மேல் இவ்வாறு குறியீடு காணப்பட்டால் அது அந்த ஸ்வரங்களை அசைத்துப் பாடுதலைக் குறிக்கும்.

உதாரணம்:- நீ நீ

**ஏற்ற ஜாரு** / இவ்வாறு குறியிட்டுக் காண்பிக்கப்படும்.

**இறக்க ஜாரு** \ இவ்வாறு குறியிட்டுக் காண்பிக்கப்படும்.



kalvi.lk

# 72 மேளகர்த்தா அமைப்பு விபரத்தின் சுருக்கம்

- 72மேளகர்த்தாசக்கரம்இரண்டுசமபாகங்களாகப்பிரிக்கப்பட்டிருக்கின்றது
- முதல் பாகத்தில் வரும் 36 மேளகர்த்தாக்களும் பூர்வ மேளகர்த்தாக்கள் என்றும் இரண்டாம் பாகத்தில் வரும் 36 பேமளகர்த்தாக்களும் உத்தர மேளகர்த்தாக்கள் என்றும் அழைப்பர்
- 1-36 சுத்தமத்திம மேளகர்த்தாக்கள்
  36 – 72 பிரதி மத்திம மேளகர்த்தாக்கள்
- இவை 12 சக்கரங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன அவையாவன இந்து
- நேத்ர அக்னி வேத பாண ருது ரிஷி வஸு பிரஹ்ம ருத்ர ஆதித்ய
- இவற்றுள் முதல் 6 சக்கரங்களும் சுத்தமத்திம சக்கரங்கள் எனவும் பின்வரும் ஆறு சக்கரங்களும் பிரதி மத்திம சக்கரங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.
- ஒவ்வொரு சக்கரத்திலுமுள்ள 6 மேளங்களும் முறையே பா ஸ்ரீ கோ பூ மா ஷா எனும் சங்கேத அட்சரங்களால் அழைக்கப்படுகின்றன
- 72 மேள இராகங்களில் ரிஷபமும் காந்தாரமும் சக்கரத்திற்கு சக்கரம் மாறுவதையும் தைவதமும் நிஷாதமும் இராகத்திற்கு இராகம் மாறுவதையும் அவதானிக்கலாம்
- விவாதி மேளங்கள் என்பவை விவாதிஸ்வரங்களை எடுத்துக் கொள்ளும் மேளங்களாகும்
- சுத்தகாந்தாரம் ஷட்சுருதிரிஷபம் சுத்தநிஸாதம் ஷட்சுருதி தைவதம் ஆகிய விவாதி ஸ்வரங்களில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு ஸ்வரங்களை எடுத்துக் கொள்ளும் மேளங்கள் விவாதி மேளங்கள் ஆகும்
- இரண்டு விவாதி ஸ்வரங்களை எடுத்துக் கொள்ளும் மேளங்களின் எண்கள் 1 6 31 36 37 42 67 72
- விவாதிமேளங்களின் தொகை 40 விவாதி தோஷமற்ற மேளங்களின் எண்ணிக்கை 32 ஆகும்

தயாரிப்பு:- செல்வி வெ.விஜயபாரதி,
ஆசிரியர்,
யா/இந்து மகளிர் கல்லூரி



kalvi.lk

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page